REGISTERED AS A CATHOLIC WEEKLY. P. 197

# பாதுகாவலன்

PATHUKAVALLAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 1 விலை ரூபா 5 01தை - 31தை 1999

14. 2. 99 ஞாயிறு

திருப்பாலத்துவ சபைத்தினம்

* * *

தந்தையே நாங்கள்

உமது பிள்ளைகள்

* * *

சிறப்பிதழ் அடுத்த இதழில் . . .

UNIVERSITY OF JAFFNA LIBRARY 12 MAR 1999 PERIODICALS DIVISION

## மாபெரும் யூபிலியின் ஆயத்தகால மூன்றாம் ஆண்டை, றோமாபுரியின் ஆயராக இன்று நாம் ஆரம்பித்து வைக்கிறோம்

– திருத்தந்தை –

நவம்பர் மாதம் 29ஆம் திகதி 98ஆம் ஆண்டு திருவருகைக்கால முதலாம் ஞாயிறு தினத்தில் மாபெரும் யூபிலியின் ஆயத்தகால மூன்றாம் ஆண்டின் ஆரம்ப அறிவிப்பை திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் புனித இராயப்பர் பேராலய புனித கதவின் முன்னால் சம்பிரதாய பூர்வமாக அறிவிப்புச் செய்தார்.

மாபெரும் யூபிலியின் ஆயத்தகால மூன்றாம் ஆண்டை றோமாபுரியின் ஆயராக இன்று நாம் ஆரம்பித்து வைக்கிறோம். தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு உலகின் மேல் அன்பு கூர்ந்த வானகத்தந்தையின் பெயரால் இதனை ஆரம்பித்து வைக்கிறோம் என்ற வார்த்தை களுடன் 99ஆம் ஆண்டை வானகத்தந்தையின் ஆண்டாக அறிவிப்பு செய்து தொடக்கி வைத்தார்.

## கத்தோலிக்க அச்சகம் இடிந்து விழுந்தது

யாழ். நகரின் முன்னணி அச்சகங்களில் ஒன்றான நூற்றாண்டு காலப் பழமை கொண்ட அச்சகத்தின் விற்பனை நிலையத்தின் ஒரு பகுதி 98ம் ஆண்டின் இறுதி நாள் இடிந்து விழுந்தது. கிறிஸ்மஸ் லீவில் அச்சகத்தினர் இருந்தபோது மேற்படி கட்டிடத்தின் கூரைப்பகுதி முற்றாக இடிந்து விழுந்து சேதத்திற்குள்ளானது.

# தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து ஒன்று சேருங்கள்

### புத்தாண்டு தின செய்தியில் யாழ் ஆயர் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பு

ஜனவரி 1–1999 புத்தாண்டு தினத்தில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வெளியிட்ட புத்தாண்டு தினச் செய்தியிலேயே மேற்கண்டவாறு அழைப்புவிடுத்துள்ளார். அவர் தம் செய்தியில் இனப் பிரச்சினையோடு தொடர்புடைய நான்கு தரப்பினர்க்கும் தனித் தனியாக அழைப்பும் வேண்டுதலும் விடுத்துள்ளார். அரச தரப்பினர்க்கும் எதிர் கட்சியினர்க்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் கட்சிகளுக்கும் என்று அவர் விடுத்த புத்தாண்டு செய்தி காலம் தாழ்த்தி இருப்பினும் பாதுகாவலன் வாசகர் நலன் கருதி முழுமையாக இங்கே வெளியிடுகின்றோம். (பக்கம் 7 இல்)

## யாழ் ஆயரின் புத்தாண்டு தின செய்திக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இணக்கம்.?

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த புத்தாண்டு தினத்தில் கடந்த ஜனவரி1–99 இல் புத்தாண்டு தின செய்தி ஒன்றை வெளியிட்டார். யாழ் நகரில் ஆயரில்லத்தில் வெளியிடப்பட்ட இச்செய்தியை உதயன் பத்திரிகை தலைப்புச் செய்தியாக முழுமையாகப் பிரசுரித்திருந்தது. அதன் பின்னர் கொழும்பு தமிழ், ஆங்கில பத்திரிகைகளும் இச்செய்திக்கு முன்னுரிமை கொடுத்து பிரசுரம் செய்தன. (தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

## கிளி கியூடெக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வதிவிடப் பயிற்சி

எமது நிறுவ்னத்தில் 05.12.98 இல் இருந்து 10.12.98 வரை எமது நிறுவனத்தில் உதவி பெற்றுவரும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், மற்றும் ஆரம்பிக்க இருக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஐந்து நாள் வதிவிடப்பயிற்சி (1) கியூடெக் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர் கியூடெக் இயக்குனர், உதவி இயக்குனர், பணியாளர்கள், பிரதம போதனா ஆசிரியர் அருட்சகோதரி அமிர்தா அந்தோனிப்பிள்ளை (சான்றிதழ் ஆரம்பக்கல்வி, சிறந்த பல் கலைக்கழகம்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாண முதல்வராக ஜீவேந்திரா போல் அடிகள் நியமனம்

அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாண முதல்வராக ஜீவேந்திரா போல் அ.ம.தி. அடிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமலமரித்தியாகிகளின் முன்னாள் முதல்வர் அருள் திரு P. யேசுநேசன் ஆசியா, ஓசியான்னா பிராந்திய புதுநிர்வாக ஆலோசகராக பதவி ஏற்றமையால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப அருள்திரு ஜீவேந்திரா போல் அடிகள் தெரிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாணம் தனி அலகாக்கப்பட்டபின் தெரிவு செய்யப்பட்ட நான்காவது முதல்வர் ஜீவா போல் அடிகளாவார். மறையுரைஞர்களின் அதிபராகவும் புனித சூசையப்பர் அ.ம.தி. சிறிய குருமட அதிபராகவும், அமல உற்பவம் அ.ம.தி.கள் இறையியலகத்தின் அதிபராகவும், யாழ் மாகாண அ.ம.தி.களின் ஆலோசகராகவும் கடந்த காலங்களில் பணியாற்றிய இவர் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் துறை விரிவுரையாளராகவும் பணிபுரிந்துள்ளார். மறையுரைஞராக இவர் பணியாற்றிய போது "அன்பு நெஞ்சங்களே" என்று இறை மக்களை விழித்து தனது கணீரென்ற தொனியில் பல கவர்ச்சி மிக்க மறையுரைகளை ஆற்றி பலரைக் குறிப்பாக இளநெஞ்சங்ளைக் கொள்ளை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் பணியால் யாழ் அமலமரித்தியாகிகள் சபை புதுப்பொலிவும், புது வளமும் பெற பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள்.

MERRY CHRISTMAS

நத்தார் புத்தாண்டுக் காலத்தில் வாழ்த்து மடல்களை அனுப்பி வாழ்த்து தெரிவித்த குருக்கள், கன்னியர், பொது நிலையினர்க்குத் தனியான வாழ்த்து மடல்களை அனுப்பமுடியவில்லை. அனுப்பிய அனைவர்க்கும் எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கிறோம்.

+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

## சமூகத் தொடர்புச் சாதனங்களுக்கு அறிமுகம்

கருத்தரங்கு – மாசி 27, 28 காலை 9–4 மணி

குருத்துவக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களுக்கும், பாதுகாவலன் நிருபர்கள்–எழுத்தாளர்களுக்குமாக பத்திரிகை இயல், சினிமா, கொம்பியூட்டர் ஆகிய துறைகள் சம்பந்தமாக நடத்தப்படும் கருத்தரங்கில் பங்கு கொள்ள விரும்புவோர் மாசி 15ம் திகதிக்கு முன் பாதுகாவலன் பணிமனையில் பதிவு செய்யவும். பதிவுக்கட்டணம் மதிய உணவு உட்பட 50/=

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
சமூக தொடர்பு ஆணைக்குழு
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# சமாதானத்திற்கான போர் என்ற சுலோகத்தைநிறுத்த வேண்டுகின்றோம்

* - கோபி அன்னானுக்கு வன்னி கத்தோலிக்க குருக்கள் வேண்டுகோள் -

வன்னியில் பணிபுரியும் கத்தோலிக்க குருக்கள் அனைவரும் இணைந்து ஐக்கிய நாடுகள் செயலர் நாயகம் கோபி அன்னானுக்கு மல்லாவியில் உள்ள U.N.H.C.R அலுவலகத்தின் ஊடாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சண்டை நடக்கும் இலங்கையின் வன்னிப் பிரதேசத்தில் பணிபுரியும் கத்தோலிக்க குருக்களாகிய நாம் எமது மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், வேதனைகளையும் குறிப்பாக இலங்கையில் நடந்த இறுதியான இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாரிய இடம் பெயர்வையும் கண்டு வேதனையுறுகின்றோம் என்று ஆரம்பிக்கின்ற மேற்படி கடிதத்தில் (தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி. பா. 127– 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

சமாதானத்திற்கான தேவையும், தேடுதலும் என்றுமில்லாதவாறு மிக அதிகரித்துள்ள நேரத்திலேயே பாதுகாவலன் ஆசிரிய பீடத்தின் கருத்தினை எழுத விளைகின்றோம்.

தமிழ் மண்ணில் கடந்த 15 ஆண்டுகளாக நடக்கும் கொடிய போரும் அதன் தாக்கங்களும், முடிவற்ற அழிவும் அதன் விளைவுகளும் இன்று எம் மண்ணில் வாழும் அனைவரையும் இனமத பேதமின்றித் தாக்கத் தொடங்கியுள்ளது.

இதனையே பேராயர் நீக்கிலஸ் மாக்கஸ் பர்னாண்டோ ஆண்டகை முடிவற்ற போரினால் இலங்கையிலுள்ள ஒரு குடும்பமாவது தனது நண்பரையோ, உறவினரையோ இழக்காமல் இல்லை என்று தனது கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தின் தேவை எல்லாத் தரப்பினரிடமும் ஆழமாக உணரப்பட்டு குரல்கள் எழுப்பப்பட்டாலும் சமாதானம் நமக்கு இன்னும் ஒரு தூரத்துப் பொருளாகவே உள்ளது.

இந்த மண் யாருக்குச் சொந்தம் என்ற விவாதங்கள் இவ்வளவு கால நீண்ட போரினதும், விடுதலைப் போராட்டத்தினதும் அழிவுகள், இடம்பெயர்வுகள், இழப்புக்கள், இறப்புக்களின் பின்னர் அர்த்தமற்றவை என்றே கருதுகின்றோம்.

நாம் எங்கிருந்து எந்தக் காலத்தில் இத்தீவில் வந்து குடியேறி இருந்தாலும் இந்த மண் இப்போ எங்கள் எல்லோரிற்கும் சொந்தமானது . . . என்று பேராயர் கூறியது இந்த விவாதத்திற்கான விடையும், முற்றுப் புள்ளியுமாகும்.

காலம் கடந்து விட்ட நிலையில் இனியும் காலத்தை இழுத்தடிக்காமல் உறுதியான செயற்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் இதய சுத்தியுடன் இறங்கி வருவதே ஏற்புடையது.

இந்தக் கொடிய போரோடு சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினர்க்கும் போரை முடிக்கவும், அமைதியை ஏற்படுத்தவும், சமாதானத்தை நிலை நாட்டவும் ஒத்துழைக்கும்படி மனிதாபிமானத்தின் பெயரால் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அழைப்பு விடுத்தது மிகவும் பொருத்தமானதே.

அரச தரப்பினர்க்கும், எதிர்த் தரப்பினர்க்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் என்று ஆயர் விடுத்த வேண்டுகோளை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆயருடைய வேண்டுகோளை ஏற்று தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய தெரிவித்துள்ள விருப்பம் நிறைவேறுமானால் தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவு நனவாகும்.

முதலில் செயலில் இறங்க வேண்டியவர்கள் அரச தரப்பினரே. இவர்களுக்கு எதிர்க்கட்சியினர் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்ட ஆயர், போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கத் தவறவில்லை. தலைவருடைய மாவீரர் தின உரையை சமாதானத்திற்கான நல்ல சமிக்கையாகும் என்று குறிப்பிட்டுள்ள ஆயர், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கருத்தை வலியுறுத்தி தமிழ்க் கட்சிகளையும் ஒன்றுபட அழைப்பு விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

சமாதானத்தின் தேவையை பௌத்த மத தலைவர்களும், சிங்கள அரசியல்வாதிகளும் உணரத் தலைப்பட்டுள்ளனர் போலத் தெரிகிறது.

வெளிநாடுகள் பலவும் இலங்கைப் பிரச்சினைத் தீர்வில் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்துள்ளன.

இவை அனைத்தும் ஆண்டின் இறுதியில் மக்கள் மனதுகளில் ஆசைகாட்டி மோசம் செய்யும் தொடர் நிகழ்வுகளாகி விடப் போகின்றனவா?

# இறை இரக்கத்தினாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறைமாவட்ட ஆயரான இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொதுநிலையினரான இறைமக்களுக்கு விடுக்கும் சுற்றுமடல்

## 1. முகவுரை

கிறிஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே,

கிறிஸ்து பிறப்பின் இரண்டாயிரம் வருடங்களின் இறுதி வருடமாகிய 1999இன் ஆரம்பத்தில், யூபிலி ஆண்டிற்கான தீவிர ஆயத்தங்களை மீண்டும் உங்கள் சிந்தனைக்கு முன்வைக்க விரும்புகிறோம். எம் நாட்டில் நடக்கும் விடுதலைக்கான போராட்டங்களும் கொடிய யுத்தமும் மக்களை சின்னாபின்னமாக்கி பெரும் அழிவுகளை ஏற்படுத்திக்கொண்டு வருவதால் ஏதிலிகளாக்கப்பட்ட மக்களின் தொகை அதிகமாகும் நிலையிலும் எமது வருத்த துன்பங்கள் மத்தியிலும் கிறிஸ்து பிறப்பின் 2000 ஆம் ஆண்டு யூபிலி ஆயத்தங்களில் நின்று நாம் ஒதுங்க முடியாது. துன்பச் சூழலில் யூபிலியை நினைவு கூரல் இன்னும் ஆழமான அர்த்தத்தையும், செயற்பாட்டுக்கான உந்து சக்தியையும் தருகின்றது. எமது கண்ணீர் காயங்களுடனும், இழப்புக்கள் சோர்வுகளுடனும் ஆண்டவர் இயேசுவின் மீட்பளிக்கும் அருள் நிறை வருகையைத் தியானிக்கிறோம்.

## 2. யூபிலி ஆண்டின் முன் ஆயத்தம்

இதற்கு முந்திய இரண்டு வருடங்களின் ஆயத்தமாக யூபிலி பற்றிய சிறப்பான கருத்துக்களை திருச்சபை நமக்கு தந்து இதனை தியானித்து செயல்படுத்த எமக்கு அழைப்பு விடுத்தது. எமது வரலாற்று தவறுகளை உணர்த்தி 2ம் வத்திக்கான் சங்கம் முன்வைத்த புதுப்பித்தல் பணியில் தீவிரமாகச் செயற்படவும் நவமான மறைபரப்புப் பணி, கிறிஸ்தவ ஒற்றுமை மதங்களுக்கிடையிலான உரையாடல் ஆகிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தவும் அழைப்புத்தரப்பட்டது. கி.பி. 2000 ஆம் யூபிலி ஆண்டின் மூன்று ஆயத்த வருடங்கள்' திரியேகக் கடவுளை மையப்படுத்தி கிறிஸ்தவ வாழ்வானது திரியேகக் கடவுளின் உறவின் நெருக்கத்தில் நடைபெறும் திருப்பயணம் என்பதை உணர்த்திற்று. 1997ம் ஆண்டின் மையக் கருத்தாக மனிதனாகப் பிறந்த ஆண்டவர் இயேசுவில் நாம் விசுவாசமும் நேற்றும் இன்றும் என்றும் வாழும் அவருடன் ஆழமான உறவும் கொள்ள தூண்டப்பட்டோம். பணியில் நாம் தீவிரமாக ஈடுபட ஊக்குவிக்கப்பட்டோம். 1998ம் ஆண்டில் பரிசுத்த ஆவியானவர் எம்மைப் புதுப்பித்து புனிதப்படுத்துகின்றார் என்ற உண்மையை ஆழமாக சிந்தித்தோம். சகல விசுவாசிகளும் பரிசுத்த தனத்தை அடைவதில் ஒரு உண்மையான ஏக்கத்தையும், மனந்திரும்பதலையும், புதுப்பித்தலில் ஆழ்ந்த அவாவையும் தூண்ட முயன்றோம். யூபிலி தயாரிப்பின் இறுதி ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இம் மூன்றாம் ஆண்டில் தந்தையாகிய இறைவனை நோக்கி, இயேசுக்கிறிஸ்து மூலம் பரிசுத்த ஆவியால் நாம் தொடரும் திருப்பயணத்தை தியானிக்கவும், தந்தை இறைவனின் அன்புறவை அனுபவித்து வாழவும் அழைக்கப்படுகின்றோம்.

## 3. எழுந்து என் தந்தையிடம் செல்வேன் உண்மையான உளமாற்றம்

கிறஸ்தவ வாழ்வு முழுவதும் பிதாவின் இல்லத்தை நோக்கி மேற்கொள்ளப்படும் ஒரு மாபெரும் திருப்பயணமாகும். இத் திருப்பயணம் முதலில் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் நடைபெறும் உளமாற்ற அனுபவமாகவேண்டும். இது பாவநிலையிலிருந்து அருள் நிலைக்குச் செல்லும் ஆன்மீகப்பயணமாகும். இருளில் இருந்து தந்தையின் ஒளிக்கு இயேசுவோடு வரும் புனித யாத்திரையாகும். இவ்விதம் நோக்கும் போது இது ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டிய உள்ளார்ந்த திருப்பயணமாக இருக்கின்றது. "நான் எழுந்து எனது தந்தையிடம் போவேன்" (லூக்கா 15–18) என்ற ஊதாரி மைந்தனின் மனநிலையை எமதாக்கிக் கொள்வோம். ஒவ்வொரு மனிதர் மட்டிலும் குறிப்பாக ஊதாரிப் பிள்ளைகளின் மட்டிலும் காட்டும். நிபந்தனையற்ற அன்பை நாள்தோறும் கண்டுணர முயற்சிப்போம். எனவே மனமாற்றம் ஒப்புரவு சமாதானம் ஆகிய கனிகளை எம் வாழ்வில் கொடுக்க இவ்வருடம் சிறப்பாக எம் அனைவரையும் அழைக்கின்றது.

## 4. மகா ஞான ஒடுக்கம்

தந்தையை நோக்கி நாம் செய்யும் எம் வாழ்வின் திருப்பயணத்தில் மனுக்குல மீட்பராகிய கிறிஸ்துவை இறுகப் பற்றிக்கொள்வது உண்மையான உளமாற்றமாகும். திருச்சபையின் புதுப்பித்தல் பணியில் மனிதர் மனமாற்றம் அடைவது முக்கியமானது. எனவே எமது மறைமாவட்டத்தின் ஒவ்வொரு பங்குகள் தோறும் அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களின் உதவியுடன் மகா ஞானஒடுக்கம் ஒன்றை நடாத்த எண்ணியுள்ளோம். பங்குத்தந்தையினர்கள் இச் செயற்திட்டத்தை வரவேற்றுள்ளனர். முடியுமானவரை இத் திட்டத்தை இவ்வருடத்தில் எமது மறைமாவட்டத்தில் மறைக் கோட்டம் கோட்டமாக பங்கு ரீதியில் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்தின் முன்னெடுத்தலுக்கு இறைமக்களின் செபதப உதவிகளும், ஆதரவும் வேண்டப்படுகின்றது. இத்திட்டம் தியான முன்நாட்கள் . . . . தியான நாட்கள் . . . . தியான தொடர் ஊக்குவிப்பு என்று மூன்று படிமுறையாகச் செயற்படுத்தப்படும்.

## 5. மகா ஞானஒடுக்கப் பணிக்குழு

பங்குகள் தோறும் மாபெரும் தியானத்தை ஒழுங்கு செய்து நடாத்துவதற்கு பங்குத் தந்தையருக்கும், இறை மக்களுக்கும் உதவ மறைவட்ட ரீதியில் பணிக்குழுவை ஏற்படுத்தியுள்ளோம். இப் பணிக்குழு விரிவாக்கப்பட்டு மேற்கூறிய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும். அமலமரித் தியாகிகள் சபை குருக்களும், மறைமாவட்டக் குருக்களும் சேர்ந்து இந்த மகா ஞான ஒடுக்கப் பணியை மேற்கொள்வார்கள். இப் பணி குருக்கள், துறவிகள், அருட் செல்விகள், இல்லற அப்போஸ்தலர்கள் ஆகியோரின் கூட்டுப்பணி முயற்சியாக இருக்கும்.

## 6. அன்பியம்

எமது பங்குத் திருச்சபை இறையருளால் மனம்மாறி தந்தையிடம் திருப்பயணம் பண்ணுகின்ற 'ஒப்புரவு' கொண்ட சமூகமாக மாற சிறு குழுமங்களாலான அன்பியங்கள் தலத் திருச்சபையில் உருவாக்கப்பட வேண்டும். இறைவார்த்தையால் வளம் பெற்று பங்கேற்கும் திருச்சபையாக மாற இது பெரிதும் உதவும். சில பங்குகளில் இது சிறிதளவு செயற்படுகின்றது. ஆனால் இப்பணி பெரிதளவில் பரவலாக்கப்பட்டு செயல்பட விரும்புகின்றோம். இறைவார்த்தையை பகிர்ந்து மக்கள் தம் மத்தியில் செயற்படுத்தி அன்பியக் குழுமங்களாக மாற துரிதமாக உழைப்போம். இதற்காகத் தலைவர்களை வழிகாட்டிகளை இனம் கண்டு பயிற்சியளித்து இவர்கள் துணையில் அன்பியப் பங்குகளாக வளர்வோம்.

## முடிவுரை

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட யூபிலி இறைத்தந்தையை நோக்கி எழுப்பும் புகழ்சிக் கீதமாக மாறும். நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி. ஆவிக்குரிய ஆசியனைத்தும் கிறிஸ்துவழியாக நம்மீது பொழிந்துள்ளார். (எபேசியர் 1 : 3–4) இவ்வருடத்தில் இறைத்தந்தையால் மிக்க அருள்பெற்ற மரியன்னையை கண்நோக்குகின்றோம். இறைசித்தத்துக்கு என்றும் அடிபணிந்தவள் அவள் (லூக்கா 1 : 38) உறவில் சிறந்தவளாக இறைத்தந்தையை நோக்கிய எம் யாத்திரையை சிந்தாந்திரையாக தந்தையின் உறவிழந்த எம்மை இயேசு சொல்வதையெல்லாம் செய்யுங்கள் (யோவான்2–5) என்று அழைப்பவளாக நினைவில்கொண்டு அவளைப் பின்பற்றுவோம். தனது பாசம் நிறைந்த குரலைக் கேட்டு மனிதர்கள் பிதாவின் இல்லத்திற்கு திரும்பவேண்டுமென்று புனித மரியாள் விரும்புகின்றாள்.

யூபிலி ஆண்டுக்கான சிறப்பான ஆயத்தங்களை இவ்வாண்டிலும் முன்னெடுத்துச் செல்ல பின்வரும் செயல்திட்டங்களை முன்வைக்கிறோம்.

## செயல் திட்டங்கள் :


1. தந்தையாகிய இறைவனின் அன்பையும், அளவில்லா பராமரிப்பையும் நாம் வாழ வேண்டிய உறவையும் நன்கு உணர்ந்து ஆழப்படுத்த திருவுரைகள், கருத்தரங்குகள் பங்குகளில் ஒழுங்கு செய்தல்.
2. இவ்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செபத்தை குடும்ப வழிபாடுகளிலும், ஆலயத்திலும் மற்றும் வழிபாடுகளிலும் பயன்படுத்தல்.
3. இவ்வருடத்தில் நாம் முன்னெடுக்கும் செயல்பாடாகிய மகா ஞான ஒடுக்க ஆயத்தங்களாகப் பின்வருபவைகளைச் செயற்படுத்துவோம்.
   - i. மனந்திரும்பல் அருளுக்காக உருக்கமாக செபித்தல்.
   - ii. பங்கு மேய்ப்புப் பணி பேரவைகள், பொதுநிலையினர் கழகங்கள், பக்திச்சபைகள் அனைத்தும் பங்குத் தந்தையுடன் கூடி இதற்கான பணிக்குழுவை அமைத்தல்.
   - iii. ஞான ஒடுக்கத்துக்கான செலவுகளை ஈடுசெய்ய தம்மால் இயன்ற பொருளுதவிகளை செய்தல்.
4. தியான காலத்தில் செபதப முயற்சிகளில் குறிப்பாக திருமணித்தியாலம், செபமாலைத்தியானம் போன்றவற்றில் அனைவரும் தீவிரமாக ஈடுபடுதல்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின் 32 வது உலக சமாதான தினச் (1.1.99) செய்தி

(01)



## 1. மனித உரிமைகளை மதிப்பதே உண்மையான சமாதானத்தின் இரகசியம்

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன் நல்லெண்ணமுள்ள சகல மக்களுக்கும் எழுதப்பட்ட "மக்களின் மீட்பர்" என்னும் எனது முதற் சுற்றுமடலில் மனித உரிமைகளை மதிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளேன். இந்த உரிமைகள் முழுமையாக மதிக்கப்படும் பொழுது சமாதானம் நிலவுகிறது. ஆனால் அவை மீறப்படும்போது ஏற்படுவது போர். போரானது இன்னும் மோசமான வரம்புமீறல்களுக்கு காரணமாகின்றது. மாபெரும் யூபிலிக்கு முந்தியதான இந்தப் புதிய ஆண்டின் ஆரம்பத்தில் உலகின் சகல பாகங்களிலும் வாழும் மக்களாகிய உங்களுடன், அரசியல் தலைவர்களும் மக்களுக்கு வழிகாட்டும் மதத்தலைவர்களுமாகிய உங்களுடன் சமாதானத்தை விரும்பி அதை உலகில் நிலைநாட்ட விளையும் உங்களுடன் இந்த முக்கியமான விடயத்தைப் பற்றி மீண்டும் பேச விரும்புகிறேன்.

உலக சமாதான தினத்தை எதிர்நோக்கும் இவ்வேளையில் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள பெரிதும் விரும்பும் ஒரு கருத்தை எடுத்துக்கூறப் போகின்றேன். டனிதனின் மாண்பைப் பேணுவதே வழிநடத்தும் டகாள்கையாயிருக்கும் போது, பொது நலத்தைத் தேடுவதே மற்றெல்லாவற்றையும்விட முக்கியமான கடப்பாடாக இருக்கும்போது, சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு உறுதியான, நிலையான அத்திவாரம் இடப்படுகிறது. ஆனால் மனித உரிமைகள் புறக்கணிக்கப்படும்போது, அல்லது அலட்சியம் செய்யப்படும் போது, அல்லது தனிப்பட்டவர்களுடைய நலன்கள் பொது நலனுக்கு மாறாக அநீதியான முறையில் மேலாதிக்கம் செலுத்தும்போது, ஸ்திரமின்மை, கிளர்ச்சி, வன்முறை ஆகியவற்றின் வித்து விதைக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

## 2. மனித மாண்பின் மதிப்பு மனுக்குலத்தின் முதுச்சொத்து

ஒரு மனிதப்பிறவியின் மகத்துவம் அளவற்றது. நேர்மையுடன் உண்மையைத் தேடுபவர்கள் இதனை எப்போதும் உணர்ந்துள்ளனர். உண்மையில், மனித வரலாறு முழுவதுமே இந்த உறுதிப்பாட்டின் ஒளியில் விளக்கப்பட வேண்டும். இறைவனின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும் உள்ளியல்பில் இறைவனை நோக்கியே திசைமுகப்படுத்தப்பட்டுள்ளனர். ஆகவே அதே மகத்துவத்தைக் கொண்ட ஏனைய மனிதரோடு இடையறாத உறவுகொண்டுள்ளனர். தனிநபருடைய நலனைப் பேணுவது பொதுநலனுக்கு ஏதுவாகும். இங்குதான் உரிமைகளும் கடமைகளும் இணைவுற்று ஒன்றையொன்று வலுப்பெறச் செய்கின்றன.

மனித ஆளைப்பற்றிய உண்மையை மறந்துவிடுவதால் ஏற்படும் ஆபத்தை எமது சமகால வரலாறு மிகத் துன்பகரமான விதத்தில் எடுத்துக்காட்டியுள்ளது. மார்க்சியவாதம், நாசிசம், பாசிசம் போன்ற அரசியற் கொள்கைகளினதும், இன மேலாதிக்கம், தேசியவாதம், இன ஒதுக்கல் ஆகிய பழமைவாதங்களினதும் விளைவுகளைக் கண்கூடாகக் காண்கின்றோம். எப்போதும் வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் உலகாயத அனுபோகங்களின் விளைவுகளும் இவை போன்றே கேடு விளைவிப்பனவாகும். இவற்றால் தனிமனிதரின் உயர்ச்சியும், அவர்களின் சுயநலத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் ஏற்படும் திருப்தியுமே வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோளாகிவிடுகின்றன. இந்த மனப்பாங்கில், பிறருக்கு ஏற்படும் எதிரிடையான விளைவுகள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. எங்கிருந்து வந்தாலும், எந்த உருவத்தில் வந்தாலும், எங்கு இடம் பெற்றாலும், மனித மகத்துவத்துக்கு ஏற்படும் எந்த அவமதிப்பும் அலட்சியம் செய்யப்படலாகாது என்பது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டும்.

(வளரும்)

## நற்செய்தித் தூண்டுதல் போட்டி இல.6

(புனித மத்தேயு நற்செய்தி பொது மொழிபெயர்ப்பு 1–10 அதிகாரங்கள்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | ❄ | ❄ |
| | ❄ | 2 | | 3 | | ❄ | ❄ |
| | 4 | | ❄ | | ❄ | ❄ | 5 |
| | | 6 | | | 7 | ❄ | |
| | ❄ | | ❄ | | | 8 | |
| ❄ | 9 | ❄ | ❄ | ❄ | | | |
| 10 | | | | | | ❄ | |
| 11 | | | | | ❄ | 12 | |

**இடமிருந்து வலம்**

1. இங்கே உங்கள் செல்வத்தைச் சேர்த்து வைக்க வேண்டாம்.
2. யோசேப்புக்கும், ஞானிகளுக்கும் இவ்வாறும் இறைவனின் செய்தி அறிவிக்கப்பட்டது.
6. இறுதிநாளில் எல்லோரும் இறைவனுக்கு இதைக் கொடுத்துத் தீரவேண்டும்
10. இவ்வாறு பேசுவதுகூட விபசாரமாகும்
11. நம்பிக்கை என்பது இவ்வாறும் பொருள்படும்.
12. மதிப்புள்ள முத்துக்களை இவை முன் வீச வேண்டாம் இறுதி எழுத்தின்றிவந்துள்ளது.

**மேலிருந்து கீழ்**

1. சோதிப்பவன்கூட இதிலுள்ளவற்றை அறிந்திருந்தான்.
2. நல்ல மரத்திலும் கெட்ட மரத்திலும் இதனைப் பெறலாம்
3. கண்ணானது உடலிற்கு இதனைப் போல அமைந்துள்ளது.
4. இறைவாக்கினர்களில்கூட இப்படியான வகையினர் உண்டு
5. இவரின் மகனும் இயேசுவின் சீடரில் ஒருவர்
6. இவன் வழிகாட்டினால் குழியில் விழ நேரும்.
7. நீ போய் குருவிடம் காட்டி இவரின் கட்டளையை நிறைவேற்று
8. பட்டி தொட்டி எங்கும் இயேசுவைப்பற்றிய இது பரவியது.

## இறை இரக்கத்தினாலும் . . .

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. இவ்வருடத்தில் ஒப்புரவு அருட்சாதனமாகிய பாவ அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை கருத்துள்ள விதமாய் மக்களுக்கு அளித்தல். இதன் சிறப்பை மறையுரை, மறைக்கல்வி மூலமாக மக்களுக்குப் புரிய வைத்தல்.
6. பிரிவினைகள், குரோதங்கள், நிறைந்த எம் சமூகத்தில் குடும்பங்கள், சமூகங்கள், குழுக்கள் பங்கு மட்டங்களில் ஒப்புரவைக் கொண்டு வரவும், உறவுகளை கட்டி எழுப்பி வலுப்படுத்தவும் வழிவகுத்தல்,

சாதிப் பிரிவினைகளால் ஏற்படும் சமூக வேறுபாடுகள் வித்தியாசங்களால் ஏற்படும் மனக்கசப்பை சமன் செய்ய முயற்சித்தல்.

7. மனம் திரும்புவோர்க்கான தப வாழ்வை வளர்க்க திருயாத்திரையை, திருத்தலங்களின் தரிசிப்பை ஊக்குவித்தல். இவ்விடங்களில் ஒப்புரவு அருட்சாதனத்துக்கான வாய்ப்பை செய்துகொடுத்தல்.
8. இறை வார்த்தையின் மூலம் "பங்கேற்கும் திருச்சபையாக" மாற அன்பிய சிறு குழுமங்களை அமைக்கும் பணியை பங்கு மட்டத்தில் துரிதப்படுத்தல்.எம் மனங்களை பகைமை, வெறுப்பு, பிரிவினை போன்றவற்றை வென்று அன்பின் அமைதியின் கருவிகளாய் மாற்றுதல்.

ஆண்டவரில்
உங்கள்மேல் பற்றுள்ள
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்.
யாழ்ப்பாணம்.
05-01-99

## தோமஸ் அடிகளின் விண்ணகப் பிறப்பின் 35 வருடநினைவஞ்சலி

(26-1-1964 - 26-1-1999)



தந்தையே இறைவா! எமது சபை ஸ்தாபகர் அருள்திரு. வ.அ. தோமஸ் அடிகளாரின் விண்ணக வாழ்வின் 35 வது ஆண்டின் நிறைவை 26–1–99 இல் நினைவு கூரும் இவ்வேளையில், எம் சபை ஸ்தாபகரின் பரிந்து பேசுதலின் மூலம் நீர் எமக்கும், மக்களுக்கும் செய்த அனைத்து நன்மைத்தனங்களுக்கும் எம் நன்றியைக் கூறுகின்றோம்.

இன்று செபமாலைத்தாசர் துறவியர் 70 ஆண்டுகளையும், செபமாலைக்கன்னியர் 50 ஆண்டுகளையும் நிறைவு செய்திருக்கின்ற வேளையில் எம்முடைய வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் எமது ஞானத் தந்தையின் பரிந்து பேசுதலினால் வழிவகுத்துக்கொண்டிருப்பதற்காகவும் உமக்கு நன்றி.

அருட்தந்தையின் பரிந்து பேசுதலின் மூலமாக அருள் வேண்டி வேண்டுதல்களை பெற்றுக் கொண்டவர்கள் அநேகர் .....

* மகப்பேறு இன்றி பல வருடங்களாக வருந்திய பல தம்பதியர்கள் எம் சபை ஸ்தாபகரிடம் தொடர்ந்து வேண்டியதினால் பெற்றோர் ஆகும் பேற்றைப் பெற்றதாகக் கூறியுள்ளார்கள். டோமினிக், றாணி என்னும் தம்பதியர் திருமணமாகி 10 வருடங்கள் பிள்ளைச் செல்வம் இல்லாது வாடிய வேளையில் எமது சபைச் சகோதரி ஒருவரின் அறிவுரையினால், எமது சபை ஸ்தாபகரிடம் தொடர்ந்து வேண்டிக் கொண்டமையால் தனது 40வது வயதில் ஓர் பெண் மகவை பெற்று நன்றி கூறுகின்றனர்.
* இன்னும் வைத்தியர்களினால் கைவிடப்பட்ட நிலையில் மரணத்தோடு போராடிய பலர் எம் சபை ஸ்தாபகரிடம் வேண்டி, அற்புத விதமாக உயிர் பிழைத்து நன்றி கூறுகின்றார்கள்.
* Mr. பீற்றர் என்பவர் மூளைப் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு யாழ் மருத்துவ மனையில் பல மாதங்களாக சிகிச்சை பெற்றும், வைத்தியர்களினால் கைவிடப்பட்ட நிலையில், செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் கொழும்புக்கு அனுப்பப்பட்டார். இதேவேளை தொடர்ந்து இவருக்காக இவரது உறவினர்களும், எம் சபை அங்கத்தவர்களும் இடைவிடாது எம் ஞானப் பிதாவிடம் மன்றாடினார்கள். இவர் கொழும்பு சென்று அங்கு பல வைத்திய பரிசோதனைகளின் பின்பு எதுவித நோயுமில்லையென்று நிரூபிக்கப்பட்டு இன்று நன்றி கூறுகின்றார்.

இன்னும் பலர் அவரிடம் நம்பிக்கையுடன் வேண்டி பல உதவிகளைப் பெற்று வருகின்றார்கள். எமது ஞானத் தந்தையில் நம்பிக்கை வைத்து அவரது பரிந்து பேசுதலை நாடி நிற்கும் அனைவரின் வேண்டுதலுக்கும் விசேஷ விதமாக, சபைரீதியாக இறைவனை மன்றாடுகின்றோம். எனவே எமது ஞானத்தந்தை B.A தோமஸ் அடிகளாரின் புனிதப் பட்டத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் அவரிடம் விண்ணப்பித்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் பின்வரும் முகவரிகளில் ஒன்றுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செபமாலைத் தாசர், கன்னியர்கள்
யாழ்ப்பாணம்

அருட்தந்தை.
S.A மைக்கல் சாமி O.M.I
'அமல உற்பவம்'
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

சபைத்தலைவி
செபமாலைக் கன்னியர் மடம்
பிரதான வீதி
யாழ்ப்பாணம்

அதிபர்
'அருள் ஆச்சிரமம்'
5, கோவில் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார் (அரு14:11)



சிறுவர்களுக்கான

தொடர் குறுநாவல் - 12

# ஒரு சிறிய புதுமை

தமிழ் வடிவம் : எஸ்.எம்.யோசவ்

முடிச்சுக்கள் போடப்பட்ட புனிதரின் இடைக்கச்சு ஒன்றின் துண்டு; அக்கயிற்றின் இழைகளிலே சிக்கிக் கிடந்த ஒரு கோதுமை மணி அன்று கொய்து வைத்தாற் போல பழுதடையாமல் பக்குவமாய் இருக்கக் காணப்பட்டது. மலையில் பூத்த காட்டு உரோசாப் பூ ஒன்றும், சிறிய பறவை இறகொன்றும் அங்கிருந்தன.

எல்லோரும் அப்பொருட்கள் விளக்கும் கருத்தை அறியும் நோக்கத்துடன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார்கள்.

இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அற்புத மனிதராகவே புனித அசிசியாரை வழிபட்டு வந்த டமிக்கோ அடிகளார் அப்பொருட்களைக் கண்டபோது உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் மல்கிக் கசிந்துருகி அழுதேவிட்டார். புனித அசிசியாரின் உருவம் தன் கண் முன்னாலே நிற்பது போன்ற பிரமை. அப்புனிதர் இடையிலே அணிந்திருந்த முடிச்சுக் கயிறும், பாடிக் கொண்டே பரவசமாகி கோதுமை வயல்களின் ஊடே அப் புனிதர் நடந்து திரிந்த காட்சியையும்; மலைச்சாரலிலே மாரிப் பனிக் காலத்திலே புனிதர் கண்டெடுத்த காட்டு உரோசாவையும்; சகோதரி என அதை அவர் அழைத்து, விந்தை மிகு அதன் அழகை ரசித்து இறைவனைப் புகழ்ந்ததையும்; புனிதரின் தோள்களிலே தங்கி அவர் உணவூட்ட உண்டு பாடி மகிழ்ந்த சிட்டுக் குருவியையும்: அது விட்டுச்சென்ற இறகையும் டமிக்கோ அடிகளார் மனத்திரையிலே கண்டார். இத்தனை உணர்வுகளும் அவரது உள்ளத்தில் அலைமோதி உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய அவருக்கு அதை தாங்கிக் கொள்ளவே முடியாது தவித்தார்.

கண்ணீர் விழித்திரையை மூடி நிற்க ஆயர் வாய்திறந்து, "இப்பொருள்களின் ஊடாக விசுவாசம், அன்பு, வறுமை என்ற செய்திதான் எமக்கு விடுக்கப்படுகிறது" என்று தமது சிந்தனையை வெளிப்படுத்தினார்.

இதுவரையும் அமைதியாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்ற பெப்பினோ, "நான் வைலெற்றாவை அழைத்துக்கொண்டு உள்ளே போகலாமா" என்று தாழ்மையாகக் கேட்டான்.

கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "ஆமாம், நீ உள்ளே போகலாம். இறைவன் உன்னோடு இருப்பாராக" என்று சிறுவனை வாஞ்சையோடு வாழ்த்தினார் டமிக்கோ அடிகளார். கிளக் கிளக் எனக் குளம்பொலி ஒலிக்க, கழுதை நடைபோட்டு ஆலயத்தின் உள்ளே சென்றது. பெப்பினோ அதைத் தாங்கிப் பிடிக்கவே இல்லை. அதன் கழுத்தைச் செல்லமாக வருடியபடியே பக்கத்தில் நடந்து சென்றான்.

எல்லோரும் என்ன நடக்குமோ என ஆவலுடன் பார்த்து நின்றனர். பெப்பினோ புனிதரின் கல்லறையைக் கழுதையுடன் வலம் வந்து, மெழுகுவர்த்திகளைக் கொழுத்தி நன்றிப் பெருக்கோடு திரும்பி வரலானான். பெப்பினோவின் ஏக நம்பிக்கையும் நாதியுமான அந்தக் கழுதை புதுத்தெம்புடன் மிக்க கம்பீரமாய் நடந்து வந்த காட்சி எவருக்கும் அதிசயத்தையும் பிரமிப்பையும் அளித்திருக்கும் என்பதற்கையமில்லை. எல்லாவற்றுக்கும் மேலாகப் பெப்பினொவின் விசுவாசமே அவர்களெல்லோரதும் உள்ளத்தை உறுத்தியது. விசுவாசத்தோடு அவன் மேற்கொண்ட யாத்திரை வெற்றிகரமாக முடிந்தது எவருக்கும் மகிழ்ச்சியே.

(முற்றும்)



## பாதுகாவலன் சிறுவர் வாசக வட்டத்தினரே! புத்தாண்டு வாழ்த்துக்களுடன் வணக்கங்கள்

சிறிய புதுமை என்ற தொடர் குறுநாவல் முற்றுப் பெற்றுவிட்டது. 1950ஆம் ஆண்டு போல் கலிக்கோ என்ற அமெரிக்க எழுத்தாளர் எழுதிய "The Small Miracle" என்ற குறுநாவலை தமிழ் வடிவில் தந்த திரு. எஸ். எம். யோசவ் அவர்களுக்கு உங்கள் பெயரால் நன்றி கூறுகிறோம்.

எப்படி குறுநாவலை வாசித்து மகிழ்ந்தீர்கள் தானே? உங்களுள் அநேகர் எதிர்பார்த்த மாதிரியும், எழுதி அனுப்பிய மாதிரியும் நாவல் முடியவில்லை இல்லையா? ஏமாற வேண்டாம். அடுத்த முறை நீங்கள் சரியாக முடிவை ஊகிக்க முயற்சியுங்கள்.

உங்களில் பலர் நாவல் பற்றிய குறிப்புக்களை எழுதி அனுப்பியிருந்தீர்கள். நன்றிகள். இன்னும் யாராவது இந்த தொடர் குறுநாவல் பற்றிய குறிப்புக்களை எழுத விரும்பினால் உடன் எழுதி அனுப்புங்கள். எல்லாவற்றையும் தொகுத்து பிரசுரிக்க இருக்கிறோம்.

உங்களுள் பலர் கோடி அற்புதரின் புதுமைகள் என்ற தலைப்பில் புனித அந்தோனியாரின் கதையை படத்துடன் போட்ட மாதிரி இந்த தொடர் குறுநாவலையும் போடும்படி கேட்டிருந்தீர்கள். இந்த நாவலுக்கு படம் போட முடியாமல் போய்விட்டது.

இதோ ஒரு புதிய தொடர் கதையொன்றை நீங்கள் கேட்டபடி படத்துடன் தொடங்க இருக்கின்றோம். வாசிக்க ஆயத்தமாகி விட்டீர்களா?

இதைவிட இன்னுமொரு புதிய போட்டியை ஆரம்பிக்கப் போகிறோம். படத்தில் உங்களுக்கு அதிக ஆர்வம் இருக்கிறபடியாலும் நாவலுடைய முடிவை உங்களை எழுதும்படி கேட்டபோது அது உங்களுக்கு கடினமானது என்று நாம் விளங்கிக் கொண்டபடியாலும் இந்தப் போட்டியைத் தொடங்குகிறோம். அடுத்த இதழில் நாம் ஒரு சிறிய கவிதை தருவோம். அதற்கு நீங்கள் பொருத்தமான படம் வரைந்து அனுப்ப வேண்டும். தரமான படங்கள் பிரசுரிக்கப்படும் அடுத்த இதழில் சந்திப்போமா?

இங்ஙனம்,

உங்களன்பின் சிநேகசன் மாமா



# விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம் 10

அருள்திரு. ம. இ. பயஸ்

## இஸ்ராயேலின் தெரிவு

அதிகாரம் 9

### இறைதந்தையின் அன்பு அடையாளம்

1–7

இறைவன் நோவாவிற்கும் அவர் புதல்வருக்கும் ஆசீர் வழங்கினார். "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" என்ற ஆசீர் (1 : 28) மீண்டும் நிலைநாட்டப்பட்டது. உயிரினங்கள் மீதும் ஆதிக்கம் அருளப்படுகின்றது. இறைவன் மனிதனோடு உடன்படிக்கையைச் செய்து தம்மையே கட்டுப்படுத்துவது தமக்குத் தகுதியானதாகக் காண்கிறார். பாவம் தண்டனை அடைவது விதிவிலக்கற்றதாயினும், மனித வாழ்வு இறை இரக்கத்தால் காப்பாற்றப்படுகிறது. பாவத்தின் விளைவாக இயற்கை அமைதி முழுவதும் அழிந்து, மறைந்து போயிருக்க வேண்டும். பாவம் இந்த இயற்கை அமைதியை மாற்றிவிட்டது. இசைவு இணக்க நிலையை நொறுக்கித் தகர்த்துவிட்டது. ஆயினும் உயிரினங்கள் தொடரவேண்டும் என்றும், இயற்கை மீது மனிதன் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றும் இறைவன் விரும்பினார். ஆகவே இயற்கை அமைதியை உறுதிப்படுத்துகின்றார். அதே வேளை இயற்கையின் மத்தியில் பயத்தையும், வன்முறையையும் வைத்துள்ளார். படைப்பின் தொடக்கத்தில். மனிதனும், விலங்குகளும் பயமின்றி ஒன்றாக வாழ்ந்தனர். எல்லோரும் காய்கறி, கனிகளையே உண்டனர். ஒருவரும் ஊனை உண்ணவில்லை (ஆதி. 1 : 29–30) மனிதனோ, விலங்குகளோ உணவுக்காகக் கொல்லப்படக் கூடாது. ஏனெனில் எல்லா உயிரும் இறைவனுக்குப் பரிசுத்தமானவை. இறைவனது அரசு பூமியில் முழுவதும் நிறைவாக நிறுவப்படும் இறுதி நாட்களையும் இக் கருத்துக்களாலேயே ஓவியமாக்குகின்றார். இறைவாக்குரைஞர்கள் (எசா. 65 : 25) வெள்ளம்வரை இந்நிலை பரவியிருந்ததெனக் குருக்கள் பாரம்பரியம் கருதுவதாகத் தெரிகிறது. அதற்குப் பின் உணவுக்காக விலங்குகளை மனிதன் கொல்லலாம். எல்லா உயிர்களும் மனிதனைக் கண்டு அஞ்சும். நோவாவின் 7 கட்டளைகள் பற்றி யூத போதகர்கள் கூறுவார்கள்.

1) சிலை வழிபாடு / பொய் தேவர் வணக்கம்
2) பொய் ஆணை / கடவுளைத் தூற்றுதல்
3) கொலை 4) காமம்
5) களவு 6) அநீதி
7) உயிருள்ள மாமிசம் உண்ணல்

8–17


யாவே அறமிக்க கடவுளாவார். மனம் போல் செய்யப்படுபவர் அல்லர். நீதி நேர்மை மிக்கவர். அவரது நீதித் தீர்ப்பு நோவாவிற்கும் அவரது குடும்பத்திற்கும் காட்டும் இரக்கத்தால் மட்டுப்படுத்தப்படுகிறது. யாவே மீட்கும் கடவுளாவார். அழிவுக்குப் பின் எஞ்சிய சிலரிடமிருந்து மீளவும் உலக வாழ்வைத் தொடங்குவார். நோவாவுடனும் அவரது புதல்வருடனும் மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் கடவுள் உடன்படிக்கை செய்தார். மண்ணுலகை அழிக்க வெள்ளப் பெருக்கு இராது.

இயற்கையின் ஒழுங்கமைப்பும் வானவில்லும் இவ்வுடன்படிக்கைக்கு அவர் காட்டும் பிரமாணிக்கத்தின் அடையாளங்களாகும். இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள உறவில் வெள்ள நிகழ்ச்சி ஓர் ஊழியின் முடிவாகும். புதிய ஊழியின் தொடக்கமாகும். அம்பு இருந்தால் வில்லின் வலிமை தெரியும். இது அம்பு இல்லாத அன்பு உள்ளது என்று காண்பிக்கும் வில்லு.

நோவாவின் குடும்பத்தைப் பற்றியும் அவர் கமம் செய்வதையும் கூறுகின்றது. நோவாவின் மக்கள் வழியாக மக்களினம் உலகம் முழுவதும் பரவிற்று. நோவாவுக்கு இறைவன் காட்டிய மீட்பிரக்கம் தீமையை நோக்கிச் செல்லும் மனிதனது போக்கைக் கட்டுப்படுத்தவில்லை. திராட்சை ரசம் கண்டு பிடிக்கப்படுகிறது. குடிவெறியில் நோவா திறந்த மேனியானான். அற்புதமான மனிதன் குடிவெறியில் தூய்மையானவர்கள் விழிப்பாயிருந்தால்தான் தூய்மையில் நிலைத்திருக்கலாம். இறைவனின் கொடைகளை அளவாக அனுபவிக்க வேண்டும். குடி போதையால் மறைவானவை அம்பலத்திற்கு வருகின்றன. காம் தன் தந்தையின் நிலையை செம், யாபெத் ஆகியோருக்கு அறிவிக்க அவர்கள் தந்தையின் மேனியை மூடி நோவாவின் ஆசீர் பெறுகின்றனர் காம் சபிக்கப்பட்டவனாக கானான் மக்களுக்குத் தந்தையாகின்றார்.

(வளரும்)

## புனிதர் 08




Mike, Saints ...are (Hants, 1986)

அடுத்தவர்களுக்கு முதலிடம் அளிப்பவர்கள் அவர்கள்

ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர். (தி.பா. 112:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனைப் பூக்கள் 08



(சென்ற இதழின் தொடர்ச்சி)

## திருவழிபாட்டில் இறைமக்கள் பங்கு பெற திருச்சங்கப் போதனைகள்

6. திருவழிபாட்டில் பங்குபற்ற நிற்கின்ற அல்லது இருக்கின்ற நிலை முக்கியமானதென திருவழிபாட்டு இலக்கம் 30 தெரிவிக்கின்றது. ஒரேயடியாக உட்கார்ந்திருப்பதோ முழந்தாள்படியிட்டிருப்பதோ வழிபாட்டில் முழுமையாகப் பங்கெடுக்க உகந்ததல்ல.

7. இலக்கம் 30 இல் வழிபாட்டில் திருமௌனம் காக்க வேண்டுமென திருச்சங்கம் மேலும் வலியுறுத்துகின்றது. செபிப்போமாக என்று சொல்லப்படுகின்ற போது வாசகங்களின் பின்னரும் குறிப்பாக குழுவாக மேற்கொள்ளுகின்ற அமைதி உள்ளத்தின் ஆழ்ந்த தியானத்திற்கும் ஒன்றிப்பிற்கும் வழிவகுக்கின்றது.

8. குழுவாக பங்குபற்றக் கூடிய பதிலுரைகள், பல்லவிகள், ஆர்ப்பரிப்புக்கள், சங்கீதங்கள், பாடல்கள், செபங்கள் ஆகியவற்றில் எல்லோரும் முழுமையாகவும், ஒன்றாகவும் பங்குபற்றுகின்ற போது திருவழிபாட்டில் ஆடம்பரம் வருகின்றது, பக்தி உணர்வு ஏற்படுகின்றது, குழுவாகச் செபிக்கும் உணர்வு உண்டாகின்றது. இவற்றில் பங்குபற்றாது இருக்கின்ற போது வழிபாடு ஒருபோதும் எமக்கு ஆழமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கப் போவதில்லை.

9. திருவழிபாட்டு இலக்கம் 53 விசுவாசிகள் மன்றாட்டு பற்றிக் குறிப்பிடுகின்றது. விசுவாசிகள் மன்றாட்டிற்குரிய பகுதி விசுவாசிகளின் ஆழ்ந்த பங்களிப்பிற்காக உருவாக்கப்பட்ட பகுதியாகும். சில வேளைகளில் விசுவாசிகள் மன்றாட்டைச் சொல்லவோ, வாசிக்கவோ விசுவாசிகள் இல்லாதிருப்பது வருத்தத்திற்கும் வேதனைக்கும் உரியதாகும்.

10. திருவழிபாட்டில் இறைமக்கள் பங்கு என்ற பகுதியில் கூறப்பட்ட அனைத்திற்கும் ஒரு முடிவு வைப்பது போல திருவழிபாட்டு இலக்கம் அமைந்திருக்கின்றது. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் பங்குபற்றுவோர் தம் பணியை முழுமையாகச் செய்கின்ற போது நிறைவு ஏற்படுகின்றது. திருப்பணியாளர்கள் என்றால் என்ன பொது நிலையினர் என்றால் என்ன தமக்குரிய செபங்களையும் பாடல்களையும் அறுத்துறுத்துப் பக்தி உள்ள விதமாகச் சொல்லுகின்ற போது வழிபாட்டில் ஏற்படுகின்ற முழுமை சொல்லும் தரமன்று.

## திருவழிபாட்டில் இறைமக்கள் பங்குபற்ற செய்ய வேண்டியது என்ன?

1. வழிபாடுகள் பற்றிய முழுமையான தெளிவான விளக்கம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். திருவழிபாட்டு நிகழ்வுகள் எவ்வாறு நடைபெறப் போகின்றன. அதன் முக்கிய நோக்கங்கள், கருத்துக்கள் என்ன என்பது பற்றிய விளக்கம் கொடுக்கப்படுகின்ற போது பங்கு பற்றுவது இலகுவாகின்றது.

2. வழிபாட்டில் முழுமையாகப் பங்கு பற்ற சூழ்நிலை மிகவும் முக்கியமாகும். நல்ல சூழ்நிலை உருவாக்கப்படுகின்ற போது வழிபாட்டில் பங்கு பற்ற நல்ல ஆவலும் மன நிலையும், ஆர்வமும் உண்டாகும் என்பது உண்மையாகும். ஆலயம் அழகுற அலங்கரிக்கப்பட்டிருப்பது அழகான பூக்கள் வைத்து சோடித்திருப்பது எப்போதும் தூய்மையாகவும் புனிதமாகவும் கண்ணைக் கவருகின்ற விதமாகவும் பீடம் அமைத்திருப்பது என்பனவெல்லாம் மனநிலைக்கு மிகவும் தேவையானவை.

3. நல்ல மனநிலையை உருவாக்க வழிபாடு பற்றிய ஒரு பயிற்சியைக் கொடுப்பதும் இங்கு பொருத்தமானதாகலாம். அத்தோடு கூட பாடல் பயிற்சிகளை வழங்குதல் பதிலுரைப் பல்லவிகளை எல்லோரும் சொல்லத் தக்க விதமாகத் தயாரித்தல் பீடத்தில் நின்று செபங்களையும் பாடல்களையும் சொல்ல வழிநடத்த ஒருவரை நியமித்தல், சிறுவர்களை குழுக்களாகப் பிரித்துச் செபங்கள் பாடல்களில் பங்கு கொள்ள ஊக்கம் ஊட்டுதல் என்பனவெல்லாம் நல்ல பயன், தரும் முயற்சிகளாகும். (வளரும்)

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை




**மரியாளுக்கு இயேசுவைவிட வேறு பிள்ளைகள் இல்லாவிட்டால் அவரை ஏன் "தலைப்பேறான மகன்" என்று கூற வேண்டும்?**

"தலைச்சன் மகனை கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பாயாக" (யாத். 13:13) என இறைவன் கட்டளையிட்டிருந்ததால் யூத மக்களிடையே ஒரு குடும்பத்தில் தலைமகனுக்கு சிறப்பான ஒரு இடம் இருந்தது. தலைச்சன் பிள்ளைக்குரிய உரிமைகள்பற்றி வேதாகமத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகவே வேறு பிள்ளைகள் பிறந்தாலென்ன, பிறக்காவிட்டாலென்ன சிறப்புக் காரணமாக முதற் பிள்ளை "தலைச்சன் மகன்" என்றே குறிப்பிடப்பட்டான்.

அத்துடன் தலைப்பேறானவர் என்பது இயேசுவுக்கேயுரிய பெயர்களுள் ஒன்று (கொலோ 1 : 15, 18)

**உணர்ச்சி வசப்பட்டு செபிப்பது சாதாரணமாக செபிப்பதைவிட இறைவனுக்கு உவப்பானதாக இருக்குமா?**

மனிதன் அறிவு படைத்தவன். அதே வேளையில் உணர்ச்சிகளும் உடையவன். இந்த இரண்டுமே மனிதனது செயற்பாடுகள் அனைத்திலும் இடம்பெறுகின்றன. மனித வாழ்வுக்கு இவை இரண்டுமே அவசியமானவை. ஆகவே எமது செபங்களிலும் இவை இடம் பெறுவது இயற்கையே.

சிலர் உணர்ச்சிகளை அதிகமாக வெளிப்படுத்துவார்கள். வேறு சிலர் அமைதியாகச் செபிக்கிறார்கள். அவரவர் இயல்புக்கு ஏற்றபடி இது நடைபெறுகிறது.

ஆவியைப் பெற்றுக்கொள்கிறவர்களில் சிலர் உணர்ச்சிகளை அதிகமாக வெளிப்படுத்துவதுண்டு. ஏனெனில் உணர்ச்சி என்பது ஆவியின் கனிகளோடு நெருங்கிய உறவு கொண்டது. இவ்வாறு உணர்வுபூர்வமாக செபிப்பது ஆன்மீகத்தை வளர்க்குமென்பது உண்மையே. ஆனால் அமைதியாக செபிப்பவரின் செபமும் அதேபோல இறைவனுக்கு உவப்பானதே. இறைவன் உள்ளத்தை நோக்குகிறாரேயொழிய வெளிச் செயற்பாடுகளையல்ல.

**காலத்துக்குக் காலம் சங்கிலிக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. சில புனிதர்களின் பெயரால் இவற்றை அனுப்பி அதைப் பிரதி செய்து ஒரு குறிப்பிட்ட தொகையினர்க்கு அனுப்பாவிட்டால் கேடுகள் நேரும் என்று அச்சுறுத்துகின்றனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இத்தகைய மூட நம்பிக்கைகள் இன்னும் இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது. இத்தகைய கடிதங்கள் வந்தால் அவற்றைப் போட வேண்டிய இடம் குப்பைக் கூடைதான். இது மூட நம்பிக்கை என்று தெரிந்து கொண்டே பயம் காரணமாக சிலர் இவற்றில் கூறியபடி செய்கிறார்கள். இதைவிட தமக்கு ஒரு கேடும் நேரக் கூடாது என்று கடவுளிடம் பிரார்த்தனை செய்தால் பயனுள்ளதாயிருக்கும். அன்பே உருவான கடவுள் இப்படிப்பட்ட கேடுகள் நேர விட்டுவிடுவாரா?

**இரட்சிப்பு இயேசுவின் இலவச கொடை என்றால் பக்தி முயற்சிகள் எதற்காக?**

இயேசு தரும் மீட்பை திருமுழுக்கின் வழியாக அடைந்து கொள்ளுகிறோம். ஆனால் மீட்பின் முழுமை அடைய அர்ச்சிப்பின் பாதையில் நாம் முன்னேற வேண்டும்.

இறைமக்களின் விசுவாசத்தில் தோன்றி திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பக்தி முயற்சிகள் விசுவாசத்தில் வளர உதவுகின்றன. இவைகளும் இறைவன் எமக்குத் தந்த கொடைதான். "உடற்பயிற்சியில் உடல் பலம் பெறுவதுபோல் பக்திப்பயிற்சியில் விசுவாச வாழ்வுக்கு உரமூட்ட வேண்டும்" என்று புனித சின்னப்பர் கூறுகிறார்.

ஆயினும் புனிதர்களின் பக்தி முயற்சிகள் யாவும் இயேசுவோடு எம்மை ஐக்கியப்படுத்தவேண்டும். இயேசுவை மேன்மைப்படுத்தாத பக்தி முயற்சிகளால் பயனில்லை.

# கத்தோலிக்க மக்கள் தங்கள் வாழ்க்கையினால் மற்ற மக்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும்.

யாழ் ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மிருசுவில் புனித நிக்கொலார் ஆலயத்தில் கடந்த 8ஆம் திகதி இடம் பெற்ற உறுதிப்பூசுதல் திருச் சடங்கில் கலந்து கொண்டு அருளுரை ஆற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கத்தோலிக்க மக்கள் அழைப்பின் மூலமாகவும், முன் மாதிரியான நன்நடத்தை மூலமாகவும் ஆண்டவருக்கு இருவகையில் சாட்சிகளாக இருக்க வேண்டும்.

ஒரு நாள் மட்டுமல்ல சீவியம் முழுவதும் நாம் பிறருக்கு சாட்சியாகத் திகழவேண்டும். 'வாயினால் பேசுதைவிட நடத்தையினால் பேசுவது அதிக சத்தமாக இருக்கும்! பிற சமய மக்கள் பரிசுத்த வேதாகமத்தையோ, புனித நற்செய்தியையோ வாசிக்கப் போவதில்லை. அவர்கள் கத்தோலிக்கர்களாகிய உங்களையும், என்னையுமே வாசிக்கப் போகின்றார்கள், அவதானிக்கப் போகின்றார்கள். எங்கள் வாழ்க்கையில் நல்ல கிறிஸ்தவ விழுமியங்கள், முன்மாதிரிகைகள் இறைபற்று இல்லையென்றால் நாம் எப்படி முன் மாதிரிகையாகத் திகழ முடியும்?

நாம் தான் நடமாடும் கிறிஸ்து. இதனை உணர்ந்து நாம் செயற்படாவிடின் பிறசமய சமூகம் கிறிஸ்துவை விசுவசிக்க நாம் தடையாக இருந்தவர்களாகிவிடுவோம் என ஆயர் தமது அருளுரையில் மேலும் தெரிவித்தார். மிருசுவில், கச்சாய், கிளாலி பங்குகளைச் சேர்ந்த 105 பேருக்கு அன்றைய தினம் ஆயர் அவர்களால் உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது.

உறுதிப்பூசுதல் சடங்கு கூட்டுத் திருப்பலியை ஆயருடன் இணைந்து ஆயரின் செயலர் அருட்திரு. அருமைநாயகம், சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்திரு. நேசநாயகம், மிருசுவில் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. யூட் அமலதாஸ் ஆகியோர் நிறைவேற்றினர்.

உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றவர்களுக்கான ஆயத்த மறை போதனைகள் மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு. எறிக் றொஷான் அடிகளாரின் வழிநடத்துதலில் மிருசுவில் திருக்குடும்ப கன்னியர் மட அருட்சகோதரிகளினாலும் மறையாசிரியர்களினாலும் கடந்த பல மாதங்களாக மிருசுவில் புனித நிக்கொலார் ஆலயத்தில் நடாத்தப்பட்டிருந்தன.

கிறிஸ்ரி றஞ்சன்

# இளவாலையில் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் சிறுவர்களின் வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு

இளவாலையில் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையின் கீழ் யாழ் மனித முன்னேற்ற நடு நிலையத்தின் உதவியுடன் இயங்கிவரும் புனித யூதாததேயு முன் பள்ளியின் வளர்ச்சிக்கு யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தினர் பல்வேறுபட்ட உதவிகளையும் வழங்குவது மட்டுமல்லாது சிறுவர்களின உளவியல்தேவையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு சிறுவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள பிரச்சினைகள் பற்றிய உளவியல் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்து கடந்த 26.09.98 அன்று மாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நடாத்தினர்.

பிள்ளைகளை ஏன் முன் பள்ளிக்கு அனுப்புகிறோம்? பிள்ளைகள் எம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றனர்? பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள பிரச்சினைகள் என்ன? இம் மூன்று கேள்விகளும் முன் வைக்கப்பட்டு நான்கு குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடி கேள்விகளுக்கான விடைகள் பெறப்பட்டன. பின்பு இக் கேள்வி விடை பற்றிய கருத்துக்கள் பகிரப்பட்டு, அதற்கு தெளிவான விளக்கமும் அளிக்கப்பட்டது.

குறுகிய நேரக் கருத்தரங்கென்றாலும் பிள்ளைகள் மட்டில் எமக்குள்ள கடமைகள் பொறுப்புக்களை அறிந்து செயற்படக்கூடிய பயனுள்ள கருத்தரங்காக அமைந்ததென பெற்றோர்கள் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். 60 பெற்றோர்கள் வருகைதந்து சிறந்த முறையில் கலந்துரையாடலில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. பிள்ளைகளின் வளர்ச்சியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

தகவல் : திருமதி. ஜே. மேரி

**கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார். (2 கொரி. 5 : 19)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகள்.....

பாதுகாவலனின் சென்ற இதழில் அறிவிக்கப்பட்டதன்படி, மனித உரிமைகள் பற்றிய கட்டுரைத் தொட ரொன்று இந்த இதழ் தொடக்கம் வெளியிடப் படவுள்ளது.

நமது அடிப்படை மனித உரிமைகள் யாவை? அவற்றைப் பேணுவது தொடர்பாக எழும் கடமைகள் எவை? பிறருடைய உரிமைகளுக்காக உழைத்த ஒருசில பெரியாரின் வாழ்க்கை – இவை போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக இக் கட்டுரைகள் அமையும்.

ஒரு கதையுடன் ஆரம்பிப் போமா? இது உபகதையல்ல் உண்மையான நிகழ்வு. இதோ. . .

## செழிக்க வைக்கும் செந்நீர்

அன்று, 1980ம் ஆண்டு, மார்கழி 3ம் திகதி காலை . . . எல் சல்வடோர் நாட்டின் தலைநகராகிய சென் சல்வடோரிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் தொலைபேசி ஒலித்தது . . . சிறப்புச் செயலர் தொலைபேசியை எடுத்தார்.

''நான் போல் சுவாமி பேசுகிறேன். அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவன். உங்களுடைய உதவி அவசரம் தேவையாயுள்ளது. எங்களுடைய குழுவைச் சேர்ந்த சிலரை நேற்றைய தினம் தொடக்கம் காணவில்லை. சிஸ்ரர் கஸெல், செல்வி ஜீன் ஆகியோரைக் காணவில்லை. நிக்கராகுவா நாட்டில் நடந்த ஒரு கூட்டத்தில் கலந்துவிட்டுத் திரும்பும் இரு அருட் சகோதரிகளை அழைத்து வருவதற்காக நேற்று மாலை விமான நிலையத்திற்குப் போயிருந்தார்கள். ஆனால் இதுவரை தம் இல்லத்திற்கு அவர்கள் திரும்பவுமில்லை... எவ்வித தகவலுமில்லை. தயவுசெய்து உதவி செய்யுங்கள்." போல் சுவாமியின் குரலில் ஏக்கம் நிறைந்திருந்தது!

அமெரிக்க தூதுவருக்கு உடனே தான் அறிவிப்பதாக செயலர் அங்கலாய்ப்புடன் உறுதிமொழி கூறினார். நான்கு அமெரிக்க பெண்களையும் தேடிக் கண்டுபிடிக்கும்படி தலைமைப் பொலீஸ் அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தார் தூதுவர்; தகவல் ஏதும் கிடைத்தால் உடனடியாகத் தனக்கு அறிவிக்கும்படியும் உத்தரவிட்டார்.

மாலையாயிற்று. ஆனால் தகவல் எதுவுமில்லை. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகிய எல் சல்வடோர் ஓர் சிறிய நாடு. 160 மைல் நீளமும் 60 மைல் அகலமும் கொண்டது.


இச்சிறிய நாட்டில் பெரியதோர் ஏற்றத்தாழ்வு; மக்களில் 98 வீதமானோர் பாமரர்; எஞ்சிய 2 வீதத்தினரே நாட்டின் பலவித வளங்களையும், செல்வத்தையும் அனுபவித்து வந்தனர். கைத்தொழிற் பொருளாதார முறைமை பெரிதாக இல்லாத ஒரு விவசாய நாடு அது. அதாவது நிலத்தை நம்பி வாழும் நாடு.

ஆனால் நிலமோ பெருமளவுக்கு அந்த இரண்டு வீதத்தினரின் சொத்தாயிருந்தது. எழுத்தறிவு, கல்வி, வசதியான வீடுகள், சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்றவை யாவும் அவர்கள் வசமே! இவை அவர்களின் பிடியிலிருந்து நழுவவிடாது பாதுகாப்பதற்கு வேண்டிய சட்டம், நிர்வாகம், தேர்தல் முறை ஆகியவையும் அவர்களுடைய கட்டுப்பாட்டில்தானிருந்தன.

ஏனைய 98 வீதத்தினரும் படிப்பு வாசனை பெறாத, கூலிவேலை செய்து ஒற்றையறைக் குடிசைகளில் வாழ்ந்துவந்த ஏழைகள்.

இவர்களுடைய இந்த ஏழ்மை நிலையானது ஏதோ இயற்கையின் விளைவாக ஏற்பட்டதொன்று அல்ல. அரசியல் அதிகாரத்தையோ செல்வம் தரும் செல்வாக்கையோ தம்வசம் கொண்ட, பேராசை படைத்த ஒருசிலர் ஏற்படுத்திய அநீதியான சமூக அமைப்பின் விளைவே அந்த ஏழைகளின் பரிதாப நிலை. பலபல ஆண்டுகளாக, பரம்பரை பரம்பரையாக இந்த நிலையில் அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்ந்து வந்தவர்கள். இவ்வொடுக்க முறைக்கு எதிராக எடுக்கப்படும் எவ்வித முயற்சியும் உடனடியாகவே பொசுக்கப்பட்டுவிடும். ஏழைகளுக்காகப் பணிபுரிவோரும் அதிக காலம் வாழ விடப்படுவதில்லை. (1992ம் ஆண்டின் தொடக்கத்தில் முடிவுற்ற 12 ஆண்டு கால உள்நாட்டுப் போரில் 50, 000 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகக் கணிக்கப்படுகிறது).

இத்தகைய சூழலில், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக திருப்பணியாற்ற, அமெரிக்க நாட்டிலிருந்து வந்த இறைத்தூதுவர்கள் நால்வரையே காணவில்லை. போல் சுவாமிக்கும், அமெரிக்க தூதரகத்தினர்க்கும் அந்த இரவு தூக்கமற்ற நீண்டதோர் இரவே. மறுநாள் காலையில்தான் செய்தியொன்று கிடைத்தது. அதுவும் நாளிதழ் மூலம். சிஸ்ரர் டொறத்தியும் ஜீனும் ஓட்டிச்சென்ற வாகனம் விமான நிலையத்திலிருந்து சற்றுத் தொலைவில் கைவிடப்பட்டுக் கிடந்தது. அவ்விருவரும் எங்கே? அவர்களுக்கு என்ன நேர்ந்தது. . .?



அருட்திரு. A.I. போர்னாட்

01

# உரிமைகளுக்காக.....

சிலநாட்களின் முன்னர்தான் ஜனநாயகப் புரட்சி முன்னணியின் ஐந்து தலைவர்கள், ஓர் கூட்டத்தில் அமைதியாக விவாதித்துக்கொண்டிருக்கையில், கும்பலொன்று அவர்களை பலவந்தமாக இழுத்துச் சென்றது. மறுநாள் அவர்களுடைய பிணங்கள் தெருவோரத்தில் காணப்பட்டன.

மார்கழி 4ம் நாள் காலை 6 மணி விமான நிலையத்திலிருந்து சற்றுத் தொலைவில் கோவில் அமைந்திருந்தது. பங்குத் தந்தையின் வீட்டுக் கதவை யாரோ தட்ட, அவர் கதவைத் திறந்தார்.

''என்ன விடயம் . . . இவ்வளவு நேரத்துடன்? போலீசாருடைய அட்டகாசமா?" பதட்டத்துடன் வினவினார் பங்குத் தந்தை.

''சர்வ சாதாரணமாக நடக்கிற விடயம்தான் சுவாமி," வந்த ஊரவர் பதிலளித்தனர். ''இம்முறை நடந்துள்ளது கொஞ்சம் மோசம். நேற்றுக்காலை 6 மணியளவில் தெருவோரத்தில் நான்கு பிரேதங்களைக் கண்டோம். பொலீசாரிடம் அறிவித்தோம். அவர்கள் அவ்விடத்திற்கு வந்து, பிரேதங்களைப் புதைக்கும்படி சொன்னார்கள். நாம் மறுத்தோம் பின்னர், அவர்கள் நீட்டிய துப்பாக்கிகளுக்குப் பயந்து சடலங்களைப் புதைத்தோம். தம் குடிசைகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அனாதை மக்கள் மத்தியில் பணிசெய்த அமெரிக்க சிஸ்ரர்மாராயிருக்கலாம். நேற்று முழுவதும் பொலீசார். வீதிவழியே திரிந்து கொண்டிருந்ததால் நாங்கள் பயத்தினால் உடனேவந்து உங்களிடம் சொல்லவில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தோம்."

அமெரிக்க தூதுவர், போல் சுவாமி, காணாமற்போனோருடன் சேர்ந்து பணியாற்றிய சில அருட்சகோதரிகள் ஆகியோர் உட்பட, அதிகாரிகளின் தலைமையில் ஒருகுழு சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தை வந்தடைகிறது. வேலையாட்கள் நிலத்தைத் தோண்டுகிறார்கள். உடல்களை ஒவ்வொன்றாகத் தூக்கி வெளியே வைக்கிறார்கள்.

தலைகள் குண்டுகளால் துளைக்கப்பட்டு, முகம் முழுவதும் இரத்தக்கறை படிந்திருந்தது. ஒருவருடைய உள்ளாடைகள் கழற்றப்பட்டு, அவற்றினால் பாதங்கள் இரண்டும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன.

மார்கழி 5ம் நாள் காலை இரங்கல் திருப்பலிக்கென நான்கு சடலங்களும் சென் சல்வடோர் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

இவர்களின் மனித நேயப் பணியினால் செழிப்புற்ற சிலரின் சாட்சியக் கூற்றுக்கள்: அமெரிக்க நாட்டில் கிளீவ்லாந்து மறைமாவட்ட இளைஞர் பணி இயக்குனர், அருட்சகோதரி மேரி பிரசிடிஸ்: ''இளைஞர் குழுவினரின் எண்ணங்களை அறிந்துகொள்ள வழங்கப்பட்ட ஆய்வுத்தாளில் ஜீன் எழுதியிருந்தாள், 'நான் மக்களோடு உழைக்க விரும்புகிறேன். சிறப்பாக, கடவுள் தங்களை அன்பு செய்கிறார் என்பதை உணராத மக்களிடையே உழைக்க விரும்புகிறேன். . ."

ஜீனுடைய சிநேகிதி கொலீன் கெலி : 'எல்சல்வடோர் நாட்டுக்குச் சென்று ஏழைகளுக்காக உழைக்கப் போகிறேன்,' என்று ஜீன் சொன்னபோது . . . படிக்கிற காலத்திலே விளையாட்டும், குதிரைச் சவாரியும், வெளிநாட்டுப் பயணங்களுமாகக் காலத்தைக் கழித்த இந்தப் பெண்ணா இப்படிப் பேசுகிறாள் என்று ஆச்சரியப்பட்டோம். அவள் சொன்னது உண்மை என்று அறிந்ததும் 'புனித ஜீன்' என்று கேலி செய்தோம். . . அவளோ ஒடுக்கப்பட்டவர்களுக்காக வாழ்ந்து, இறந்து, தான் சொன்னதை நிரூபித்துவிட்டாள்.

ஒரு அமெரிக்க பெண்மணி: ''மதுபானத்திற்கு அடிமையான பெண்களை மீட்பதற்காக உழைத்தார் சிஸ்ரர் டொறத்தி. நான் மதுவைத் தொடாத வண்ணம் எத்தனையோ இரவுகள் உறங்காது என்னோடு விழித்திருந்து, எனது வெற்றிக்குக் காலாயிருந்தார் அவர். எல்சல்வடோர் நாட்டிற்கு வந்து ஏழைகள் மத்தியில் அவர் ஆற்றிக்கொண்டிருந்த பணியை நான் நேரடியாகக் கண்டேன். பலருக்குப் புத்துயிர் தந்த இப்புனிதையின் செந்நீரை ஏனோ சிதறவைத்தனர் . . . !"

# 18வது சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் மகாநாட்டு அனுபவப் பகிர்வு 01

– அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை –

கடந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியிலே சர்வதேச கத்தோலிக்க அச்சக ஒன்றியத்தின் (U.C.I.P) கடிதம் ஒன்று எனது காரியாலயத்திற்கு வந்திருந்தது. "இவங்களுக்கு வேற வேலையில்லை ஏதாவது அனுப்பிக் கொண்டே இருப்பாங்கள்" என்று மனதில் அலுத்துக் கொண்டு வழமை போல் இவர்களிடம் இருந்து வருகின்ற செய்தியும் அறிவுறுத்துதலும் தான் இது என்று தள்ளிவிட்டேன். அந்தக் கடிதத்தினுள்ளே ஒரு அரும்பெரும் சந்தர்ப்பமும், புதிய ஒரு அனுபவமும் காத்திருந்ததை கடிதத்தை திறக்காமல் நான் எப்படி அறிய முடியும்?

தள்ளிவிட்ட கடிதம் சில நாட்களாக அப்படியே கிடந்தது.

UNION OF THE CATHOLIC INTERNATIONAL PRESS (U.C.I.P) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சர்வதேச கத்தோலிக்க அச்சக ஒன்றியம் உலகம் முழுவதும் பரந்துள்ள ஒரு பெரிய நிறுவனமாகும். உலகின் கத்தோலிக்க அச்சுத்துறையினரையும், கத்தோலிக்க பத்திரிகையாளரையும் இணைத்துச் செயற்படுகின்ற இந்த நிறுவனத்திற்கு வேறு பல பணிகளும் உண்டு.

அந்தக் கடிதத்திற்கு என்ன நடந்தது என்று நீங்கள் அறிய விரும்புகின்றபடியால் மற்றைய பணிகளைப் பற்றி நான் இப்போ எழுதி உங்கள் பொறுமையைச் சோதிக்கவில்லை. இந்த நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் சுவிற்சலாந்தில் ஜெனீவா நகரில் அமைந்திருக்கின்றது. அந்தக் காரியாலயத்தில் இருந்துதான் இந்தக் கடிதம் வந்திருந்தது.

வெளிநாட்டுக் கடிதம் என்ற மதிப்புக்கூட கொடுக்காமல் விட்டு விட்டேனே என்று நினைத்துக் கொண்டு பல நாட்களாகக் கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்து உடைத்தேன்.

பிரான்சில் பாரிஸ் மாநகரில் யுனைஸ்கோ மண்டபத்தில் 156 நாடுகளைச் சேர்ந்த ஏறக்குறைய இரண்டாயிரம் பிரதிநிதிகளோடு நின்ற போது எனக்கு இந்தக் கடிதம் ஞாபகம் வந்தது. அந்தக் கடிதத்தை மட்டும் நான் திறந்து பார்க்காமல் இருந்திருந்தால் ஓ . . . .நினைக்கவே என்னவோ செய்கின்றது. இனி ஒரு கடிதத்தையும் இப்படி தள்ளிவிடக் கூடாது அது அறுவைக் கடிதம் என்று தெரிந்தால் கூட.

கடிதத்தினுள்ளே இருந்ததொன்றும் எனக்கு அப்போ பெரிதாகத் தெரியவில் லை. இந்தக் கடிதத்திற்குப் பின்னால் நடக்க வேண்டிய பல வேலைகள் நல்லபடியாக நடந்து முடிந்தால்தானே என்று ஒரு ஏக்கப் பெருமூச்சை வெளியே விடுவதா இல்லையா என்று உள்ளேயே இழுத்துக் கொண்டேன்.

18வது சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் மாநாடு ஏறக்குறைய இரண்டு கிழமைகளுக்கு நடைபெறப் போகின்றது– அழைப்பு வந்திருக்கிறது. ஒரு மைமல் பொழுதில் கதையோடு கதையாக மெல்லிய குரலில் ஆயரிடம் கேட்டேன். அடுத்த கேள்வியை ஆயர் கேட்பதற்கு முன்னதாக அவர்கள் அனுப்பியிருந்த அந்த விபரக் கொத்தை அவர் கைகளில் திணித்து விட்டேன். என்ன கேள்வி கேட்க ஆயர் நினைத்தாரோ, பின் ஏன் நிறுத்தினாரோ தெரியாது. விபரக்கொத்தின் பக்கங்களை முன்னும் பின்னும் புரட்டினார்.

– இது ஒரு நல்ல மாநாடு நல்ல அனுபவமாய் இருக்கும். புதிய புதிய அச்சுத் திட்டங்களையும், நடைமுறைகளையும் அறியக் கூடியதாய் இருக்கும். அதனால் பாதுகாவலன் பத்திரிகைக்கும், கத்தோலிக்க அச்சகத்திற்கும் நல்ல பயன் கிடைக்கும் – ஆயரை பேசவே விட வில்லை, நான் சொல்லிக் கொண்டே போனேன். விபரக் கொத்தை முழுமையாகப் புரட்டிப் பார்த்த திருப்தியில் ஆயர் நிமிர்ந்தார். என்ன சொல்லப் போகிறார்? ...... (வளரும்)

ஆண்டவரே தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும் (அரு.14:18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை "அமுதுவிற்கு" பாப்பரசரின் பாராட்டு



இளவாலை "அமுது" என்று அழைக்கப்படும் சொல்லின் செல்வன் அடைக்கலமுத்து மாஸ்ரரை பாதுகாவலன் வாசக வட்டத்தினருக்கு நாம் அறிமுகம் செய்ய வேண்டிய தேவை இருக்காது.

இளவாலையை சேர்ந்த இவர் 'நெஞ்சே நினை', 'காக்கும் கைகள்', 'அன்பின் கங்கை அன்னை திரேசா', 'அமுதுவின் கவிதைகள்', மடுமாதா காவியம்' எனப் பல நூல்களை எழுதியுள்ளார். லண்டனில் இப்போது வசித்து வரும் இவரைப் பாராட்டி பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர் பாராட்டு பத்திரமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

உலான்ஸ் வேர்த் பட்டின மண்டபத்தில் லண்டன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் ஒளிவிழா கொண்டாடப்பட்ட வேளை தலைமை தாங்கிய லண்டன் பேராயர் கலாநிதி கோவட் திப்பனார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த அமுதுவிற்கு பாப்பரசரின் மடலை வாசித்து பாராட்டு பத்திரத்தை கையளித்தார்.

யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, திருமலை–மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை, திருக்குடும்பக் கன்னியர் மட வட மாகாணத் தலைவி அருட்செல்வி சொபியா பஸ்தியாம்பிள்ளை, முன்னாள் தலைவி அருட்செல்வி புஸ்பம் ஆகியோர் அனுப்பிய வாழ்த்துச்செய்திகளை வாசித்து அமுதுவின் கடந்த கால எழுத்தாற்றலைப் போற்றி "இது தான் உமது வாழ்க்கை" என்ற ஆக்க நூலை லண்டன் கத்தோலிக்க ஆன்மீகப்பணியக இயக்குனர் அருட்திரு T.E.தேவராஜன் அமுதுவிடம் கையளித்தார்.

"சிறந்த கலைஞர்களில் ஒருவராகவும், புகழ்பெற்ற ஒரு எழுத்தாளராகவும் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும், சமயத்துறைக்கும் நீர் செய்து வரும் சேவைகளை அறிந்து அன்பான தந்தையின் இடத்திலிருந்து உம்மை ஆசீர்வதிக்கிறேன்" என்று திருத்தந்தை தெரிவித்துள்ள பாராட்டு மடலை மேலே காணலாம்.

# யாழ். மறைமாவட்ட மறைக்கல்வித் தேர்வு-1998.10.24

மேற்படி பாடசாலைகளில் நடைபெற்ற மறைக்கல்வித் தேர்வில் ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் படித்து பரிசு பெறும் மாணவர்களைப் பாராட்டுகின்றோம்.

இத்தேர்வு திறம்பட நடைபெற எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இத்தேர்வில் முதல் மூவிடம் பெற்று பரிசு பெறுவோர் பெயர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இவர்களுக்கான பரிசில்களை யா/மறைக்கல்வி நிலைய இயக்குநர் உங்கள் பாடசாலைக்கு நேரில் வந்து வழங்குவார்.

முதல் மூவிடம் பெற்று பரிசு பெறுவோர்

ஆண்டு 5

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | ச. வி. ம. காமலிற்றா | 96 புள்ளி யா/புனித ஜோண் பொஸ்கோ |
| 1ஆம் இடம் | ம. பிறாங் சில்வின் | 96 புள்ளி யா/புனித ஜோண் பொஸ்கோ |
| 2ஆம் இடம் | இ. ஏபிரகாம் பிரசாத் | 95 புள்ளி யா/புனித ஜோண் பொஸ்கோ |
| 2ஆம் இடம் | பீ. பாலேந்திரா | 95 புள்ளி யா/புனித ஜோண் பொஸ்கோ |
| 2ஆம் இடம் | சி. எட்றியன் | 95 புள்ளி யா/புனித ஜோண் பொஸ்கோ |
| 3ஆம் இடம் | W.I. ஜக்சன் | 94 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |

ஆண்டு 6

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | ஆன் துஷ்யந்தி ராஜேந்திரன் | 88 புள்ளி தி.கு.க. ஆங்கிலப் பாடசாலை |
| 2ஆம் இடம் | ஸ். சே. கமில்டன் | 85 புள்ளி உசன் இராமநாதன் ம.வி. |
| 3ஆம் இடம் | செ. யூடித் பபினா | 84 புள்ளி இள/கன்னியர் மடம் ம.வி |

ஆண்டு 7

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | வெ. சிந்துஜா | 84 புள்ளி பாசையூர் சென் அன்ரனீஸ் றோ. க. மகளிர் |
| 2ஆம் இடம் | ம. மேரி டொமற்றில்டா | 83 புள்ளி தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை |
| 3ஆம் இடம் | மேரி சிந்துஜா திலகரட்ணம் | 82 புள்ளி தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை |

ஆண்டு 8

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | யூடா மாறினி அமலதாசன் | 86 புள்ளி தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை |
| 2ஆம் இடம் | பிரியந்தி ஜீவரெட்ணம் | 85 புள்ளி தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை |
| 3ஆம் இடம் | ச. டார்லின் நிரூபா | 84 புள்ளி யா/கன்னியர் மடம் ம.வி. |

ஆண்டு 9

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | எம். சிறீதரன் | 91 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |
| 2ஆம் இடம் | தே. மேரிவின் | 90 புள்ளி யா/கன்னியர் மடம் ம.வி. |
| 3ஆம் இடம் | எம். சி. சுதாகரன் | 89 புள்ளி இள/புனித கென்றியரசர் கல்லூரி |

ஆண்டு 10

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | அ. யோ. தனேந்திரன் | 95 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |
| 2ஆம் இடம் | ஜெ. அயோனா சியாமலின் | 92 புள்ளி தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை |
| 3ஆம் இடம் | பொ. டினேஸ்குமார் | 90 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |

ஆண்டு 11

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | ம. தர்மிக்கா அனோஜ் | 96 புள்ளி தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை |
| 2ஆம் இடம் | பா.நிறஞ்சன் | 92 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |
| 3ஆம் இடம் | ப. றெனாட் செறில்னெஸ் | 91 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |
| 3ஆம் இடம் | ம. டிரோன் | 91 புள்ளி யா/புனித பத்திரிசியார் கல்லூரி |

# கிளி/கியூடெக் .... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து விரிவுரைகளை அருட்சகோதரி கிறிஸ்ரபெல் (பயிற்றப்பட்ட உளநல ஊக்குவிப்பாளர்) நடாத்தி, உதவியாக அவரது குழுவினரும் கலந்து கொண்டனர். அடுத்து திரு. பொன்னையா தில்லைநாதன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆரம்பக்கல்வி) அவர்கள் விரிவுரைகளை நடாத்தி நிறைவு செய்தார். இப்பயிற்சி நெறியானது மூன்று தவணைகளைக் கொண்டது. முதற் பயிற்சி நெறி (1) 10.12.98 இரவு 11 மணியளவில் கலை நிகழ்வுகளுடன் இனிதே நிறைவுற்றது.

அருட்திரு ப. இருதயதாஸ்

# தனிப்பட்ட விருப்பு. . . (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது மண்ணில் மிக நீண்ட காலமாகக் கொடிய போர் முடிவின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் நம் இனம் அழிந்து கொண்டிருக்கிறது. நம் நாடு வளம் இழந்து போகின்றது.

எனவே நத்தார்–புத்தாண்டுக் காலத்தில் நீதி, சமாதானத் தின் பெயரால் – மனித நேயம், அன்பின் பெயரால் அரச தரப்பினருக்கும், எதிர்க் கட்சியினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் தனித் தனியே சமாதானத்துக்கு அழைப்பு விடுத்து யாழ். ஆயர் செய்தி விடுத்துள்ளார்.

அரச தரப்பினருக்கு

போரின் மூலம் சமாதானம் என்ற சுலோகத்தை தவிர்த்து அமைதிக்கான தீர்வைப் பேச்சளவில் வைத்துக் கொள்ளாமல், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக காலத்தை இழுத்தடித்து அழிவைப் பெருக்கிக் கொள்ளாமல் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வுக்கான செயல் திட்டத்தில் திடகாத்திரமாகத் துணிந்து இறங்குங்கள்.

எதிர்க் கட்சியினருக்கு

உங்கள் கட்சி நலனை முதலாவதாகக் கருதாமல் நாட்டு நலனை மேலாகக் கருதுங்கள். மக்கள் சுபீட்சத்தை மனதில் வைத்து அரசுடன் தீர்வுக்கான முழு முயற்சிகளில் இதய சுத்தியுடன் ஒத்துழைத்து ஒற்றுமையைக் காணும் முயற்சியில் தீவிரமாக இறங்குங்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு

மாவீரர் தினத்தில் சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையை தலைவர் விடுத்தது மீண்டும் அமைதிக்கான நம்பிக்கைக் கீற்றுக்களைத் தந்துள்ளது.

தமிழ் பேசும் சிறுபான்மையினர் நீண்ட காலப் போரினால் நலிந்து அழிந்துவரும் வேளையில் போரினால் மட்டுமே எமக்கு விடுதலை கிடைக்கும் என்ற கொள்கையிலிருந்து விலகி பேச்சு வார்த்தை மூலம் – கலந்துரையாடல், விட்டுக் கொடுத்தல், சமரசப் போக்கு என்பவை மூலம் – தீர்வு காண முன் வாருங்கள்.

போராட்டத்திலும் உங்கள் நடவடிக்கைகளிலும் அதிதீவிரப் போக்கை குறைத்து பொது மக்களின் பாதுகாப்பில் விசேட கவனமும், கரிசனையும் காட்டும்படி மனிதாபிமானத்தின் பெயரால் வேண்டுகிறோம்.

தமிழ்க் கட்சிகளுக்கு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கொள்கையின்படி எல்லோரும் ஒன்றாகும்போது தமிழர்களின் குரல் ஏகோபித்த வலுவான சக்தியாக மாற முடியும். தமிழ் மக்களின் பொது நலனுக்காக தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து ஒன்று சேரும்படி அழைக்கிறோம்.

புத்தாண்டு அமைதிக்கான நம்பிக்கையைத் தரும் ஆண்டாக மலர ஆசிக்கிறோம். தமிழ் பேசும் நல்லுலகுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# மறை ஆசிரியர்கள் பயிற்சி ஆரம்ப விழா

1999 தைத் திங்கள் 13ம் நாள் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் மறை ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக 64 மாணவ, மாணவிகள் வருகை தந்திருந்தனர். காலை 10 மணிக்கு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. திருப்பலியை ஆயருடன் அருட்தந்தை கிறிஸ்தோப்பர், அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர்.

மறை உரையில் ஆயர் அவர்கள் சிறப்பாக நான்கு விடயங்களைப் பயிற்சியாளர்களின் மனதில் பதியும்படியாக 'அகர' வரிசையில் எடுத்துக் கூறினார். 'அ' என்பது அறிவு – அதாவது இறைவனை அறிதல் என்றும், 'ஆ' என்பது தன்னையும் தான் கற்றவைகளைப் பற்றி, தன்னைச் சூழவுள்ள உலகு பற்றி ஆய்வு செய்து 'இ' என்பதன் வழியாக அதில் ஈடுபாடு கொண்டு பணிபுரியவும் வேண்டுமென்ற மறை ஆசிரியரின் சிறப்பான நோக்கையும் அழகாகத் தெளிவுபடுத்தினார்.

திருப்பலியைத் தொடர்ந்து நடு நிலைய இயக்குனர் ஆர். சி. எக்ஸ் நேசராஜா எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். அவர் தமது உரையில் எமது பயிற்சியில் குடும்ப[illegible] வேண்டுமென்றும், பெற்றுக் கொள்ளப்போகும் பயிற்சியில் இறை அறிவும், இறை அனுபவமும் பெற்று நீங்கள் பணி செய்யப்போகும் பங்குத் தளங்களில் சிறார்களை மறை அறிவில் நெறிப்படுத்தவும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து ஆயர் அவர்கள் தமது ஆசி உரையில் நாம் சகோதரத்துவத்தோடு பயிற்சியில் நிலைத்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும் கிறிஸ்துவிலே நாம் கட்டப்பட்டவர்களாக, அவரிலே நம் உறவைப் புதுப்பித்து ஆழப்படுத்தி பணியாற்ற வேண்டுமென்று கூறினார்.

தொடர்ந்து மறைக்கல்வி இணைப்பாளர் திரு. எஸ். எவ். சவுந்தரம் ஆசிரியர் அவர்கள் பாடத் திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார். ஈற்றில் அனைவருக்கும் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்.

இதனைத் தொடர்ந்து அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் தலைமையில் பற்பல விளையாட்டுக்கள் வழியாக ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து உறவை வளர்த்து பயிற்சிக்காக எங்களை ஆயத்தம் செய்தோம்.

தகவல் : மேரி ஆன், நஜனி
(மறை ஆசிரிய பயிலுனர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் ஆயர் மேன்மை தங்கிய இராயப்பு யோசேவ் ஆண்டகையின் கிறிஸ்மஸ் செய்தியில் இருந்து...

எமது நாடு 21ஆம் நூற் றாண்டில் காலடி எடுத்து வைக்கும் போது சமாதானம் நிறைந்த ஒரு நாடாகக் காலடி எடுத்து வைக்க வேண்டும்.

போர் போரைத்தான் பெற்றுத்தரும். சமாதான அணுகு முறைதான் சமா தானத்தைப் பெற்றுத்தரும். சமாதானம் என்பது நீதி யிலும் உண்மையிலும் இருந்து மட்டுமே ஊற்றெ டுக்கும் ஓர் உயர்ந்த ஆன் மீகச் செல்வம் ஆகும். சமா தானம் என்ற சொல்லே "சமத்துவத்தை தானம் செய்வது" என்பதிலிருந்து உருவானதாகும்.

* * *

## மடுக்கோவிலுக்கு தொலைத் தொடர்பு

மடுமாதா தேவாலயத்திற் குத் தொலைத் தொடர்பு வசதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் வழங்கப்பட்டுள்ளது. மேலி டத்து உத்தரவுப்படி வவுனி யாத் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தி லிருந்து வழங்கப்பட்டுள்ள மேற்படி றேடியோ தொலை பேசி இணைப்பு வன்னி யில் இராணுவக் கட்டுப்பா டற்ற பகுதிக்கு வழங்கப்பட் டுள்ள முதலாவது இணைப் பாகும்.

* * *

## மெலிஞ்சி முனையில் மீண்டும் பாடசாலை திறப்பு

மெலிஞ்சி முனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கல வன் பாடசாலை ஒன்பது வருடகால இடைவெளியின் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. தீவுப் பகுதி காரம்பன் பங்கின் துணைப்பங்காக விளங்கும் மெலிஞ்சி முனையில் இயங்கி வந்த மேற்படி பாட சாலையானது 1990 ஆவணி இடம்பெயர்வோடு நிறுத்திவைக்கப்பட்டது. இப்பாடசாலை அண்மை யில் வேலணை கிழக்கு மகா வித்தியாலய அதிபரா கக் கடமையாற்றிய V. A. சிவராசாவை அதிபராகக் கொண்டு பழைய கட்டடத் திலேயே இயங்கத் தொடங் கியுள்ளது.

ஆரம்ப வைபவத்தில் ஊர்காவற்றுறை உதவி அர சாங்க அதிபர் J.X. செல்வ நாயகம் வண.பிதா. S. யேசு தாஸ் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல் லூரி) ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

இவ்வூரில் இப்பாட சாலை மீண்டும் திறக்கப் பட்டமையால் சிறுவர்கள் தூர இடங்களிலுள்ள பாட சாலைகளுக்குச் சென்று கல்வி கற்கவேண்டிய கஷ்ட நிலை மாறியுள்ளதாக ஊரில் பெரியவர்கள் தெரி விக்கின்றனர்.

# இளவாலையில் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் சிறுவர்களின் வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு

இளவாலையில் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடி களாரின் தலைமையின் கீழ் யாழ். மனித முன்னேற்ற நடு நிலையத்தின் உதவியுடன் இயங்கிவரும் புனித யூதாத தேயு முன் பள்ளியின் வளர்ச் சிக்கு யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தினர் பல்வேறு பட்ட உதவிகளையும் வழங்கு வது மட்டுமல்லாது சிறுவர் களின் உளவியல் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு சிறுவர் களின் வளர்ச்சிக்குத் தடை யாக உள்ள பிரச்சினைகள் பற்றிய உளவியல் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்து கடந்த 26.09.98 அன்று மாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நடாத் தப்பட்டது.

பிள்ளைகளை ஏன் முன்பள்ளிக்கு அனுப்புகி றோம்? பிள்ளைகள் எம்மிட மிருந்து எதை எதிர்பார்க்கின் றனர்? பிள்ளைகளின் வளர்ச் சிக்குத் தடையாக உள்ள பிரச் சனைகள் என்ன? இம் மூன்று கேள்விகளும் முன் வைக்கப் பட்டு நான்கு குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடி கேள்வி களுக்கான விடைகள் பெறப்பட் டன. பின்பு இக்கேள்வி விடை பற்றிய கருத்துக்கள் பகிரப் பட்டு, அதற்கு தெளிவான விளக்கமும் அளிக்கப்பட்டது.

குறுகிய நேரக் கருத்தரங் கென்றாலும் பிள்ளைகள் மட் டில் எமக்குள்ள கடமைகள் பொறுப்புக்களை அறிந்து செயற்படக் கூடிய பயனுள்ள கருத்தரங்காக அமைந்ததென பெற்றோர்கள் தம் கருத்துக் களைத் தெரிவித்தனர். 60 பெற்றோர்கள் வருகை தந்து சிறந்த முறையில் கலந்துரை யாடலில் பங்குபற்றியமை குறிப் பிடத்தக்கது. பிள்ளைகளின் வளர்ச்சியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

*தகவல் : திருமதி. சீ. மேரி*

# தேசிய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இணக்கம் ஒன்றிற்கு வாருங்கள்

- சமூக மற்றும் சமூகங்களுக்கான நிலையம் ஜனாதிபதிக்கும் எதிர்கட்சித் தலைவருக்கும் விடுக்கும் வேண்டுகோள் -

நாட்டு மக்களின் அவசரமானதும் கடு மையானதுமான வேண்டுகோள் எனும் தலைப்பில் 38 அமைப்புக்கள் கூட்டாக ஓர் அறிக்கையை வெளியிட்டு உள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் விடுக் கப்பட்டுள்ள மேற்படி வேண்டுகோளில் தேசிய பிரச்சனையைத் தீர்ப்பதற்கான இணக்கமொன் றிற்கு வருமாறும் இப் பிரச்சனையை அரசியல் கட்சித் தேர்தல் அரங்கிலிருந்து வெளியே கொண்டுவருமாறும் தேசிய பிரச்சனையில் சகல ருக்கும் நியாயத்தைப் பெற்றுத்தரும் நோக்கில் தங்களுக்கிடையில் இணங்கிக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த நிபந்தனைகள் எவை என்பதை நாட்டிற்கும் உலகிற்கும் உடனடியாக எடுத்துக் கூறுமாறும் வேண்டிக்கொள்ளுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ் ஆயரின் . . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி செய்திக்கு தமிழ் அமைப்புக்கள் ஒருமித்த குரலில் இப்போ கருத்து வெளி யிட்டுள்ளதாக வீரகேசரி பத் திரிகை தெரிவித்துள்ளது. யாழ் மறைமாவட்ட ஆயர் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும், ஒன்று பட்டால் உண்டு வாழ்வு எனக் கோரியிருந்தமை குறித்து கருத்துத் தெரிவித்தபோது தமிழ்க்கட்சிகளின் தலைவர் கள் பின்வருமாறு தெரிவித்த தாக அறிகிறோம். யாழ் ஆய ரின் கோரிக்கை வரவேற்கத் தக்கது. தமிழ்க்கட்சிகள் ஒன்றி ணைய வேண்டுமானால் ஒரு வரை ஒருவர் பழிவாங்காமல் ஜனநாயக உரிமைகள் மதிக்கப் படும் நிலை ஏற்பட வேண்டும். புலிகள் தமது கொள்கையினை மாற்றினால் அவர்களுடன் ஒற் றுமைப்படுவதில் எவ்வித பிரச் சனையும் இருக்காது என்று E.P.D.P. அமைப்பின் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்தார். விடு தலைப்புலிகளின் செயற்பாடு களிலிருந்தே ஏனைய கட்சிகள் தமது கொள்கைகளை வகுக் கின்றன. எனவே அவர்களின் கொள்கையில் மாற்றம் ஏற்பட் டால் ஒற்றுமைப்பட முடியும். இவர்கள் அனைத்து தமிழ் கட்சிகளுடனும் ஐக்கியப்பட விரும்புவார்களா என்பது கேள் விக்குறியே! அவர்கள் ஐக்கியத் திற்கு இணக்கம் தெரிவித்தால் நாம் தயார் என்று புளொட் அமைப்பின் உபதலைவர் N. மாணிக்கவாசன் தெரிவித்தார். தமிழ்த்தரப்பினர் ஐக்கியப்படு வது முக்கியமானதும், அவசர மானதுமாகும். ஒற்றுமை முயற் சியில் யாராவது ஈடுபட்டால் அதற்கு நாம் முழு ஒத்துழைப் பையும் வழங்கத் தயாராக உள் ளோம். புலிகளுடன் ஐக்கியப் படுவதில் பிரச்சனையில்லை. ஆனால் அவர்களது போக்கில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று E.P.R.L.F. அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

# சமாதானத்திற்கான . . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட் டான் என்ற கிராமத்தில் டிசம்பர் 3ம்திகதி 1998ம் ஆண்டு அதிகாலை வேளையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையையும் எல்லாவற்றையும் கைவிட்டு உயிருக்காக மக்கள் இடம் பெயர்ந்த நிலையையும் ஏறக்குறைய 350 பேர் இராணுவத் தினரிடம் சிக்கிக் கொண்டதாக I.C.R.C மூலமாக தாம் அறிந்ததனையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனைவிட எறிகணை வீச்சாலும் விமானத்தாக்குதலாலும் 1150 குடும்பங்களைச் சார்ந்த 9 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடி யிருப்புப் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதைவிட நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் தமது உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்ச மடைந்துள்ளனர். இவர்களில் அனேகர் முன் னைய இராணுவ நடவடிக்கைகளால் இடப் பெயர்ந்தவர்கள். பொருளாதாரத் தடையும் இலங்கை அரசாங்கத்தின் நிவாரண நிறுத்தமும் இவர்களை தம் சொந்த நாட்டில் நாடோடிகளாக் கியுள்ளது என்று வன்னி நிலையை விளக்கிய பின்னர் "நாம் உங்களது நிலையைப் பயன் படுத்தி இலங்கை அரசாங்கத்தின் அர்த்தமற்ற சமாதானத்திற்காக போர் என்ற நிலையை நிறுத்தி அர்த்தமுள்ள உண்மையான பேச்சு வார்த்தையை விடுதலைப் புலிகளுடன் நடத்தி நீதியோடு நிலைக்கக்கூடிய சமாதானத்தை எமது நாட்டிற்குக் கொண்டு வாருங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவை நலம் பாராட்டு விழா

கடந்த 18 வருட காலமாக மறைக்கல்வி நிலையத்தில் சிறந்த ஊழியராகக் கடமையாற் றிய திரு. S. அந்தோனிமுத்து அப்பா அவர் கள் 1999 தை 8 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்று தம் இல்லம் சென்றுள்ளார்.

அன்னாரது தன்னலம் நோக்காப் பணி களைப் பாராட்டி அவருக்கு ஆசிவேண்டி முன்னைநாள் இயக்குனர்கள் அருட்தந்தை J.நீக்கிலஸ், அருட்தந்தை R. H. சகாயநாயகம், இந்நாள் இயக்குநர் R. C. X. நேசராஜா, திரு வழிபாட்டு நிலைய இயக்குநர் J. J. மௌலிஸ் ஆகியோர் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர். இந்நாளில் அவரின் அரிய பணிகள் அனைத் தும் எல்லோராலும் நினைவுகூரப்பட்டு பாராட் டப்பட்டது. திரு. அந்தோனிமுத்து அப்பா அவர்கள் எல்லோருக்கும் மதிய விருந்தளித்து தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

## இலங்கையின் பிரதிநிதியாக பாதுகாவலன் ஆசிரியர் தெரிவு

சர்வதேச கத்தோலிக்க அச்சக ஒன்றியத்தின் (UCIP) 18 வது பத்திரிகையா ளர் மகாநாட்டில் பாதுகாவ லன் பத்திரிகை சார்பாக அதன் ஆசிரியர் அருள் திரு. ரூபன் மரியாம் பிள்ளை கடந்த ஒக்ரோபர் 98இல் கலந்து கொண்டார். பிரான்சில் பரிசில் யுனெஸ் கோ மண்டபத்தில் நடந்த மேற்படி மகாநாட்டிலேயே தென் ஆசிய கத்தோலிக்க அச்சக இணையத்தின் (SACPA) இலங்கைக்கான பிரதிநிதியாக அவர் தெரிவு செய்யப்பட்டார். எதிர்வரும் மூன்று ஆண்டு களுக்கு இவர் இலங்கைக் கான பிரதிநிதியாக செயல் படுவார்.

****

## மறை ஆசிரியரின் திருமண வெள்ளிவிழா

நிரந்தர மறை ஆசிரியர் திரு. எஸ். அந்தோனிப் பிள்ளை தம்பதியரின் திரு மண வெள்ளி விழா 19.1.99 அன்று 'அகவொளி' இல் லத்தில் சிறப்பாக நடந்தே றியது. இதில் ஆயர், குருக் கள், கன்னியர், மறை ஆசி ரியர்கள் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப் பித்தனர்.

காலை 7 மணிக்கு மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தலைமையில் பல குருக்க ளும் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றி அவர்களுக்கு இறைவன் கொடுத்த அனைத்து வளங் களுக்காகவும், வாழ்வு என னும் கொடைக்காகவும் நன்றி கூறினர். திருப்பலி யைத் தொடர்ந்து தம்பதிய ரைப் பாராட்டி இவர்கள் இன்னும் பல காலம் நல மோடு வாழ்ந்து பொன் விழா, வைர விழாக்களைக் காணும் பேற்றையும் பெற வாழ்த்தினர். ஈற்றில் காலை விருந்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

*****

## பங்குத் தந்தையர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

பங்குத்தந்தையர்களே தயவு செய்து எழுத்து ஆற்றலும், ஆர்வமும் உள்ள இரண்டு பிரதிநிதிகளின் விபரங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

மாசி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் 'சமூகத் தொடர்பு' ஆணைக்குழுவி னால் நடாத்தப்படும் சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு அறிமுகம் என்னும் கருத்தரங் கில் இவர்கள் பங்குபற்றத் தக்க விதமாக தயவு செய்து ஒழுங்குகளை மேற்கொள் ளுங்கள். பங்குகளில் பாது காவலன் நிருபர்களையும், வாசகர் வட்டத்தினையும் ஏற் படுத்தி 'பாதுகாவலன்' வளர உதவி புரியுங்கள். விண்ணப் பங்கள் அனுப்ப வேண்டிய இறுதி நாள் மாசி 15.

- ஆசிரியர் -

வீட்டுக்கொரு பாதுகாவலன் விசுவாசத்தின் பாதுகாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம். பிரதான வீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197